# தமிழ்

## அகரம்

### முதல் பருவம்




தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை-600025

www.tamilvu.org

# தமிழ்

## அகரம்

முதல் பருவம்

தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை-600025.

**தமிழ்நாடு அரசு**

**முதல்பதிப்பு - 2025**

விலை: ரூ. 250.00

**பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்**

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**நூல் அச்சாக்கம்**

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்**

www.textbooksonline.tn.nic.in

**ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும்**
**(18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24×7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)**

**குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?**
**மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?**
**பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?**
**அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098**
**உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்**

CHILD LINE 1098 NIGHT & DAY

**மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?**
**பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?**
**தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?**
**அழையுங்கள் 14417**
**உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்**

14417 கல்வித் தகவல் மையம்

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்

சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்

தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்

தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!

அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற

எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

தமிழணங்கே!

உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

வாழ்த்துதுமே!

- 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்

## தமிழ்த்தாய் வாழ்த்து - பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 1 | உயிர் எழுத்துகள் ( அ-ஊ) | | 1 |
| | பாடி மகிழ்வோம்<br>அணில்! அணில்!<br>ஆத்திசூடி (அ-ஊ) | கேட்டல் கருத்தறிதல்<br>இனியாவின் பிறந்தநாள் விழா<br>(கதை) | |
| 2 | உயிர் எழுத்துகள் (எ-ஔ)<br>ஆய்த எழுத்து (ஃ) | | 22 |
| | இலக்கணம்<br>குறில், நெடில் | | |
| | பாடி மகிழ்வோம்<br>எலி ஒன்று வந்தது!<br>ஆத்திசூடி (எ-ஔ) | கேட்டல் கருத்தறிதல்<br>உணவுத் திருவிழா<br>(உரையாடல்) | |
| 3 | மெய் எழுத்துகள் (க்-ப்) | | 45 |
| | பாடி மகிழ்வோம்<br>மிதிவண்டி | கேட்டல் கருத்தறிதல்<br>கண்களைக் காப்போம்<br>(உரையாடல்) | |
| 4 | மெய் எழுத்துகள் (ம்-ன்) | | 60 |
| | இலக்கணம்<br>வல்லினம், மெல்லினம், இடையினம். | | |
| | பாடி மகிழ்வோம்<br>நத்தையாரே!<br>நத்தையாரே! | கேட்டல் கருத்தறிதல்<br>மகிழ்வித்து மகிழ் (கதை) | |
| 5 | உயிர்மெய் எழுத்துகள் (க-னீ) | | 76 |
| | பாடி மகிழ்வோம்<br>அன்பு! | கேட்டல் கருத்தறிதல்<br>புகழ்ச்சிக்கு மயங்காதே!<br>(கதை) | |

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 6 | உயிர்மெய் எழுத்துகள் (கு-னே) | | 102 |
| | பாடி மகிழ்வோம்<br>ஒளிபடைத்த கண்ணினாய்! | கேட்டல் கருத்தறிதல்<br>தமிழ்ப்பள்ளி (உரையாடல்) | |
| 7 | உயிர்மெய் எழுத்துகள் (கை-னௌ) | | 127 |
| | பாடி மகிழ்வோம்<br>உலகநீதி | கேட்டல் கருத்தறிதல்<br>புத்தகம் படிப்போமா! (கதை) | |
| 8 | உறவு முறை | | 156 |
| | பாடி மகிழ்வோம்<br>செடி வளர்ப்பேன் | மீள்பார்வை பயிற்சிகள் | |
| 9 | ஈரெழுத்துச் சொல் | | 168 |
| | இலக்கணம்<br>ஒருமை பன்மை | | |
| | பாடி மகிழ்வோம்<br>அதோ பாராய்! | கேட்டல் கருத்தறிதல்<br>ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் | |
| 10 | எண்ணுப்பெயர்கள், வடிவங்கள் | | 184 |
| | பாடி மகிழ்வோம்<br>ஒன்று... இரண்டு... மூன்று... | கேட்டல் கருத்தறிதல்<br>சிங்கமும் மானும் (கதை) | |
| 11 | எளிய இலக்கணம் | | 196 |
| | இலக்கணம்<br>மூவிடப் பெயர் | | |
| | பாடி மகிழ்வோம்<br>ஓடி விளையாடு பாப்பா | கேட்டல் கருத்தறிதல்<br>வணிக வளாகம் (உரையாடல்) | |

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 12 | **எளிய இலக்கணம்** | | |
| | இலக்கணம் | | |
| | ஒலி வேறுபாடு | | 206 |
| | பாடி மகிழ்வோம் | கேட்டல் கருத்தறிதல் | |
| | குரங்கும் விழுதும் | பகிர்ந்து உண்போம் (கதை) | |
| 13 | **எளிய இலக்கணம்** | | |
| | இலக்கணம் | | |
| | பெயர்ச்சொல், வினைச்சொல், பெயரடை, வினையடை | | 217 |
| | பாடி மகிழ்வோம் | கேட்டல் கருத்தறிதல் | |
| | சின்னஞ்சிறு கிளியே! | என் விருப்பம் (உரையாடல்) | |
| 14 | **எளிய இலக்கணம்** | | |
| | இலக்கணம் | | |
| | வேற்றுமை உருபு | | 229 |
| | பாடி மகிழ்வோம் | கேட்டல் கருத்தறிதல் | |
| | உடலின் உறுதி | நலமாய் வாழ்வோம் (கதை) | |
| 15 | மீள்பார்வை பயிற்சிகள் | | 238 |


கேட்க...

பார்க்க...

மதிப்பீடு

# வணக்கம்

பாடம் 1



## 1.1 பேசுவோம்



### சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அம்மா | அப்பா | அத்தி | அன்னாசி |
| ஆப்பிள் | ஆரஞ்சு | இலந்தை | உலர் பழங்கள் |

## 1.2 உயிர் எழுத்துகள்

தமிழ் மொழியில் உயிர் எழுத்துகள் பன்னிரண்டு.

முதலில் அ முதல் ஊ வரையுள்ள எழுத்துகளைப் படிப்போம்.

அ ஆ

இ ஈ

உ ஊ

## 1.3 அறிவோம்

### அ



அம்மா



அணில்



அல்லி



அம்பு



அருவி



அரசன்

### ஆ



ஆடு



ஆறு



ஆமை



ஆப்பிள்



ஆரஞ்சு



ஆலமரம்

## 1.4 திரும்பப் படிப்போம்

**அ**

அம்மா

அணில்

அல்லி

அம்பு

அருவி

அரசன்

**ஆ**

ஆடு

ஆறு

ஆமை

ஆப்பிள்

ஆரஞ்சு

ஆலமரம்

**புதிய சொற்கள்**

| | |
|---|---|
| அன்னம் | அப்பளம் |
| ஆனி | ஆந்தை |

## 1.5 சொல்லிப் பழகுவோம்



சிறிய அணில்



பெரிய அம்பு



சிறிய ஆமை



பெரிய ஆடு

## 1.6 பயிற்சி

### பொருத்துவோம்



அ



ஆ



ஆ



அ

## 1.7 பாடி மகிழ்வோம்

### அணில்! அணில்!



அணில்! அணில்! ஓடுது!

ஆடிப் பாடி ஓடுது!

இனிய பழம் தேடுது!

ஈச்ச மரத்தைப் பார்க்குது!

உச்சி மேலே ஏறுது!

ஊஞ்சல் போல ஆடுது!

## 1.8 அறிவோம்

### இ



இஞ்சி



இலை



இட்லி



இறகு

### ஈ



ஈ



ஈட்டி



ஈசல்



ஈச்சமரம்

## 1.9 திரும்பப் படிப்போம்

### இ

இஞ்சி

இலை

இட்லி

இறகு

### ஈ

ஈ

ஈட்டி

ஈசல்

ஈச்சமரம்

### புதிய சொற்கள்

இரண்டு

இனிப்பு

ஈரம்

## 1.10 சொல்லிப் பழகுவோம்



இஞ்சி நல்லது



ஈச்சம்பழம் இனியது



இட்லி உண்



ஈட்டி எறி

## 1.11 பயிற்சி

### பொருத்துவோம்



ஈ



இ



ஈ



இ

## 1.12 பாடி மகிழ்வோம்

### ஆத்திசூடி

அறம் செய விரும்பு

ஆறுவது சினம்

இயல்வது கரவேல்

ஈவது விலக்கேல்

உடையது விளம்பேல்

ஊக்கமது கைவிடேல்

- ஔவையார்



## 1.13 அறிவோம்

### உ



உணவு



உப்பு



உலகம்



உழவர்

### ஊ



ஊஞ்சல்



ஊசி



ஊதல்



ஊதா

## 1.14 திரும்பப் படிப்போம்

### உ

உணவு

உப்பு

உலகம்

உழவர்

### ஊ

ஊஞ்சல்

ஊசி

ஊதல்

ஊதா

### புதிய சொற்கள்

உண்டியல்

உரல்

ஊக்கம்

ஊர்வலம்

## 1.15 சொல்லிப் பழகுவோம்



உழவு செய்



ஊஞ்சல் ஆடு



உணவு உண்



ஊதல் ஊது

## 1.16 பயிற்சி

### பொருத்துவோம்



உ__



உ__



ஊ__



ஊ__

## 1.17 கேட்டல் கருத்தறிதல்

### இனியாவின் பிறந்தநாள் விழா



இனியாவுக்குப் பிறந்தநாள். பெற்றோர் சிறப்பாகக் கொண்டாட விரும்பினர். மகளின் விருப்பத்தைக் கேட்டனர். அவள், நண்பர்களுடன் கொண்டாடலாம் என்றாள். பெற்றோர் ஏற்றுக்கொண்டனர். இனியா தன் நண்பர்களை வீட்டிற்கு அழைத்தாள். இனியாவின் பிறந்தநாளை மகிழ்ச்சியாகக் கொண்டாடினர். அனைவரும் விருந்து உண்டனர். பின்னர், அருகிலுள்ள கடற்கரைக்குச் சென்றனர். மாலை வீடு திரும்பினர். இனியாவுக்கு அந்த நாள் இனிய நாளாக அமைந்தது.

## 1.18 பயிற்சிகள்

(அ) எழுத்தை நிரப்புவோம் (அ, ஆ, இ. ஈ, உ, ஊ)



______ணில்



______லை



______ப்பு



______தல்



______மை



______சல்

(ஆ) பார்த்து எழுதுவோம்







(இ) வரிசைப்படுத்தி எழுதுவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஈ | உ | ஆ | ஊ | இ | அ |



(ஈ) விடுபட்ட எழுத்தை எழுதுவோம்




(உ) முயலுக்கு வழிகாட்டிய எழுத்துகளை எழுதுவோம்



# வணக்கம்

பாடம் 2



## 2.1 பேசுவோம்



### சொற்கள்

(ஐந்து, எட்டு, ஏழு, ஒன்பது, ஒட்டகம்,

ஓடம், ஓணான், ஓநாய்)

## 2.2 உயிர் எழுத்துகள்

தமிழ் மொழியில் உயிர் எழுத்துகள் பன்னிரண்டு. இப்போது, எ முதல் ஔ வரையுள்ள எழுத்துகளையும் ஃ என்னும் ஆய்த எழுத்தையும் படிப்போம்.

எ ஏ

ஐ ஒ

ஓ ஔ

ஃ

## 2.3 அறிவோம்

### எ



எலி



எருது



எட்டு



எறும்பு

### ஏ



ஏழு



ஏர்



ஏரி



ஏணி

## 2.4 திரும்பப் படிப்போம்

### எ

எலி

எருது

எட்டு

எறும்பு

### ஏ

ஏழு

ஏர்

ஏரி

ஏணி

### புதிய சொற்கள்

எரிமலை

எலுமிச்சை

ஏலக்காய்

ஏவுகணை

## 2.5 சொல்லிப் பழகுவோம்



எறும்புகள் ஊரும்



எலுமிச்சை புளிக்கும்



ஏவுகணை பாயும்



ஏலக்காய் மணக்கும்

## 2.6 பயிற்சிகள்

(அ) பொருத்துவோம்



எ



ஏ



எ



ஏ

(ஆ) எழுத்தை நிரப்புவோம்



| | | |
|---|---|---|
| | ரு | து |

(எ/ஏ)



| | |
|---|---|
| | ரி |

(எ/ஏ)



| | |
|---|---|
| | லி |

(எ/ஏ)



| | |
|---|---|
| | ணி |

(எ/ஏ)



| | | | |
|---|---|---|---|
| | று | ம் | பு |

(எ/ஏ)

## 2.7 பாடி மகிழ்வோம்

### எலி ஒன்று வந்தது!



எலி ஒன்று வந்தது!

ஏணி மேலே ஏறுது!

ஐந்து ரொட்டி கண்டது!

ஒன்றைக் கையில் எடுத்தது!

ஓடி ஒளிந்து தின்றது!

ஓங்கி ஏப்பம் விட்டது!

ஔ... ஔ...

## 2.8 அறிவோம்

ஐ



ஐவர்



ஐந்து



ஐவிரல்

## 2.9 திரும்பப் படிப்போம்

**ஐ**

ஐவர்

ஐந்து

ஐவிரல்

**புதிய சொற்கள்**

ஐயா

ஐப்பசி

ஐம்பது

ஐரோப்பா

## 2.10 சொல்லிப் பழகுவோம்



ஐவர் நின்றனர்



ஐந்து பலூன்

## 2.11 அறிவோம்

ஒ



ஒன்று



ஒன்பது



ஒட்டகம்



ஒட்டகச்சிவிங்கி

ஓ



ஓடை



ஓலை



ஓவியர்



ஓணான்

## 2.12 திரும்பப் படிப்போம்

**ஒ**

ஒன்று

ஒன்பது

ஒட்டகம்

ஒட்டகச்சிவிங்கி

**ஓ**

ஓடை

ஓலை

ஓவியர்

ஓணான்

**புதிய சொற்கள்**

ஒலிபெருக்கி

ஒற்றுமை

ஓட்டம்

ஓவியம்

## 2.13 சொல்லிப் பழகுவோம்



பெரிய ஒட்டகம்



சிறிய ஓடம்



இரண்டு ஒலிபெருக்கி



அழகிய ஓவியம்

## 2.14 பயிற்சிகள்

### (அ) பொருத்துவோம்



ஒ



ஒ



ஒ



ஒ

(ஆ) எழுத்தை நிரப்புவோம்



| | | |
|---|---|---|
| | ட | ம் |

(ஒ / ஓ)



| | |
|---|---|
| | லை |

(ஒ / ஓ)



| | | |
|---|---|---|
| | ன் | று |

(ஒ / ஓ)



| | | | | |
|---|---|---|---|---|
| | ட் | ட | க | ம் |

(ஒ / ஓ)



| | | |
|---|---|---|
| | ணா | ன் |

(ஒ / ஓ)

## 2.15 பாடி மகிழ்வோம்

### ஆத்திசூடி

எண் எழுத்து இகழேல்

ஏற்பது இகழ்ச்சி

ஐயம் இட்டு உண்

ஒப்புரவு ஒழுகு

ஓதுவது ஒழியேல்

ஔவியம் பேசேல்

அஃகஞ் சுருக்கேல்

- ஔவையார்



## 2.16 அறிவோம்

ஔ



ஔடதம்



ஔவையார்

## 2.17 திரும்பப் படிப்போம்

ஔ

ஔவையார்

ஔடதம்

## 2.18 சொல்லிப் பழகுவோம்



ஔவையார் வந்தார்

## 2.19 பயிற்சி

### நிரப்புவோம்



| | | | |
|---|---|---|---|
| | வை | யா | ர் |



| | | | |
|---|---|---|---|
| | ட | த | ம் |

## 2.20 கேட்டல் கருத்தறிதல்

### உணவுத் திருவிழா



| | | |
|---|---|---|
| அப்பா | : | உணவுத் திருவிழா நடக்கிறதே, போலாமா? |
| அம்மா | : | அப்படியா? எங்கே நடக்குது? |
| அப்பா | : | கடற்கரைக்குப் பக்கத்தில இருக்கிற விளையாட்டுத் திடல்ல நடக்குது. |
| வேந்தன் | : | அப்பா, நா விளையாடப்போறேன், அதனால வரலேப்பா. |
| முல்லை | : | நானுந்தான் விளையாடப்போறேன், |
| அம்மா | : | அடடா, பிள்ளைகளா நல்லாக் கேட்டுக்குங்க. அங்கே வந்தீங்கனா பலவகையான உணவுகளைப் பாக்கலாம். |
| வேந்தன் | : | அப்படி என்ன உணவு இருக்கும்? |
| அம்மா | : | ஆப்பம், இடியாப்பம், பிட்டு, கொழுக்கட்டை, அடை, தோசை, பொங்கல், வடை, முறுக்கு……..இன்னும் எத்தனையோ இருக்கு. |
| முல்லை | : | ஓ! இத்தனை உணவுகளா? எல்லா உணவையும் பார்க்கணும்போல இருக்கே? |
| அம்மா | : | பார்க்க மட்டுமா? உங்களுக்குப் பிடித்த உணவுகளை வாங்கியும் சாப்பிடலாம். |
| வேந்தன் | : | ஓ! நாங்க இப்பவே வர்றோம்பா. |
| அப்பா | : | மிக்க மகிழ்ச்சி. வாங்க, எல்லாரும் போலாம். |

# 2.21 உயிர் எழுத்துகள்

| குறில் | நெடில் |
|---|---|
| குறுகி ஒலிப்பது | நீண்டு ஒலிப்பது |
| அ, இ, உ, எ, ஒ | ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ |

| | |
|---|---|
| அணில் | ஆமை |
| இலை | ஈசல் |
| உலகம் | ஊஞ்சல் |
| எறும்பு | ஏணி |
| ஒட்டகம் | ஐவர் |
| | ஓணான் |
| | ஔவையார் |

## 2.22 அறிவோம்

ஃ



எஃகு வாள்

## 2.23 திரும்பப் படிப்போம்

ஃ

எஃகு வாள்

**புதிய சொற்கள்**

அஃது அஃறிணை

இஃது

## 2.24 சொல்லிப் பழகுவோம்



எஃகு வாள் வீசு



அஃது அணில்



இஃது இலை

## 2.25 பயிற்சிகள்

(அ) பொருத்துவோம்



ஐவர்



ஓடம்



ஔவையார்



ஏணி



எறும்பு



ஒட்டகம்

## (ஆ) நிரப்புவோம்



| | | |
|---|---|---|
| | ட | ம் |

(ஒ/ஓ)



| | | |
|---|---|---|
| | ந் | து |

(ஐ/ ஔ)



| | | | | |
|---|---|---|---|---|
| | ட் | ட | க | ம் |

(ஒ/ ஔ)



| | | |
|---|---|---|
| | ரு | து |

(எ/ஏ)



| | |
|---|---|
| | ணி |

(ஏ/எ)



| | | | |
|---|---|---|---|
| | வை | யா | ர் |

(ஔ/ஓ)

பாடம் 3

# வணக்கம்



## 3.1 பேசுவோம்




### சொற்கள்

(தேங்காய் மிட்டாய், கண்ணாடி, குச்சி மிட்டாய், கருப்பட்டி மிட்டாய், இலந்தை அடை, தேன் நெல்லிக்காய்)

## 3.2 மெய் எழுத்துகள்

தமிழ் மொழியில் மெய் எழுத்துகள் பதினெட்டு. முதலில் க் முதல் ப்

வரையுள்ள எழுத்துகளைப் படிப்போம்

| | | |
|---|---|---|
| க் | ங் | ச் |
| ஞ் | ட் | ண் |
| த் | ந் | ப் |

## 3.3 அறிவோம்

### க்



தக்காளி



சக்கரம்



கொக்கு

### ங்



சங்கு



கங்காரு




வங்கி

### ச்



பச்சை மிளகாய்



பச்சைக்கிளி



எலுமிச்சை

## 3.4 திரும்பப் படிப்போம்

| க் | ங் | ச் |
|---|---|---|
| தக்காளி | சங்கு | பச்சை மிளகாய் |
| சக்கரம் | கங்காரு | பச்சைக்கிளி |
| கொக்கு | வங்கி | எலுமிச்சை |

**புதிய சொற்கள்**

அக்கா முக்காலி தங்கம் சிங்கம் ஒட்டகச்சிவிங்கி தச்சர்

## 3.5 சொல்லிப் பழகுவோம்



கொக்கு பறக்கும்



சக்கரம் சுழலும்



மாங்காய் புளிக்கும்



சிங்கம் முழங்கும்



ஈச்சம்பழம் இனிக்கும்



பச்சைக்கிளி பேசும்

## 3.6 பயிற்சி

### நிரப்புவோம்

**க்**



த ___ காளி



கொ ___ கு



ச ___ கரம்

**ங்**



ச___ கு



க ___ காரு




வ___ கி

**ச்**



ப ___ சை மிளகாய்



ப ___ சைக்கிளி



எலுமி___ சை

## 3.7 பாடி மகிழ்வோம்

### மிதிவண்டி

இரு சக்கர வண்டி
இதன் பேர் மிதிவண்டி
எனக்குப் பிடித்த வண்டி
எங்கும் உருளும் வண்டி
எரிபொருள் இல்லா வண்டி
ஏறி மிதித்தால் ஓடும்
எளிதாய் எங்கும் செல்லும்
எல்லாருக்கும் ஏற்ற வண்டி



## 3.8 அறிவோம்

ஞ்



பஞ்சு



இஞ்சி



ஆரஞ்சு

ட்



எட்டு



பட்டம்



தட்டு

ண்



வண்டு



நண்டு



பூண்டு

## 3.9 திரும்பப் படிப்போம்

| ஞ் | ட் | ண் |
|---|---|---|
| பஞ்சு | எட்டு | வண்டு |
| இஞ்சி | பட்டம் | நண்டு |
| ஆரஞ்சு | தட்டு | பூண்டு |

**புதிய சொற்கள்**

மஞ்சள் கஞ்சி பட்டு வட்டம் தண்டு அண்ணன்

## 3.10 சொல்லிப் பழகுவோம்



கையில் பஞ்சுமிட்டாய்



மரத்தில் ஆரஞ்சு



தட்டில் லட்டு



வானில் பட்டம்



பூவில் வண்டு



கண்ணாடியில் முகம்

## 3.11 பயிற்சி

நிரப்புவோம்

(ஞ்/ச்)



| | | |
|---|---|---|
| | இ | |
| ப | | சு |
| | சி | |



(ட்/ண்)



| | | | |
|---|---|---|---|
| | ந | | |
| க | | ணா | டி |
| | டு | | |



(ப்/ட்)



| | | | |
|---|---|---|---|
| | ல | | |
| ப | | ட | ம் |
| | டு | | |



## 3.12 அறிவோம்

**த்**





வாத்து　　மத்தளம்　　நத்தை

**ந்**





ஐந்து　　பந்து　　தந்தம்

**ப்**





அப்பா　　பப்பாளி　　கப்பல்

## 3.13 திரும்பப் படிப்போம்

| த் | ந் | ப் |
|---|---|---|
| வாத்து | ஐந்து | அப்பா |
| மத்தளம் | பந்து | பப்பாளி |
| நத்தை | தந்தம் | கப்பல் |

**புதிய சொற்கள்**

மெத்தை சாமந்தி பந்தல் பாப்பா

## 3.14 சொல்லிப் பழகுவோம்



பத்து விரல்



மத்தளம் கொட்டு



பந்து விளையாடு



தண்ணீர்ப் பந்தல்



பெரிய கப்பல்



உப்பு உவர்க்கும்

## 3.15 பயிற்சி

நிரப்புவோம்







ந ___ தை
(த்/ந்)

க ___ பல்
(ப்/ம்)

ப ___ து
(ந்/த்)

## 3.16 கேட்டல் கருத்தறிதல்

### கண்களைக் காப்போம்




| | | |
|---|---|---|
| மகிழ்நன் | : | எனக்குக் கண்ணு வலிக்குது டாக்டர். |
| டாக்டர் | : | நீ எப்போதும் செல்போனில் கேம் விளையாடுகிறாயா? |
| மகிழ்நன் | : | ம்... ம்... ஆமா டாக்டர். |
| டாக்டர் | : | ஓ! அப்படியெனில் உனக்குக் கண்ணில் வலி மட்டுமில்ல, கண்பார்வையும் குறையும். |
| மகிழ்நன் | : | இதை எப்படிச் சரி செய்யறது டாக்டர்? |

டாக்டர் : செல்போனில் விளையாடுவதைக் குறைத்துக்கொள்.

மகிழ்நன் : சரிங்க டாக்டர்.

டாக்டர் : பழங்கள், கேரட், கீரை சாப்பிடு. கண்ணுக்கு நல்லது.

மகிழ்நன் : எப்போது எல்லாம் சாப்பிட வேண்டும்?

டாக்டர் : நாள்தோறும் சாப்பிட வேண்டும்.

மகிழ்நன் : வேறு என்ன செய்ய வேண்டும்?

டாக்டர் : இரவில் நன்கு தூங்கு. கண்களுக்கு ஓய்வு கிடைக்கும்.

மகிழ்நன் : எத்தனை மணி நேரம் தூங்க வேண்டும்?

டாக்டர் : எட்டு மணி நேரமாவது தூங்க வேண்டும்.

மகிழ்நன் : அப்படியே செய்கிறேன், நன்றி டாக்டர்.

## 3.17 பயிற்சிகள்

(அ) கண்டுபிடித்து வட்டமிடுவோம். (க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | ப் | பா | ளி | இ | ஞ் | சி | மொ | ச் | சை | எ |
| ஆ | பூ | ம | ஞ் | ச | ள் | ப | ட் | டா | ணி | லு |
| ர | ண் | வெ | ங் | கா | ய | ம் | ல | ர | நு | மி |
| ஞ் | டு | தே | ங் | கா | ய் | ப | ந் | து | ங் | ச் |
| சு | த | க் | கா | ளி | மா | ங் | கா | ய் | கு | சை |
| மு | ட் | டை | ப | ந் | து | ம | த் | து | ம | ய |

(ஆ) எழுத்தை நிரப்புவோம்



கொ ____ கு



பூ ____ டு




வ ____ கி



ம ____ சள்



உ ____ பு

(இ) வட்டமிடுவோம் (க், ங், ச், ஞ், த், ந்)

| | | |
|---|---|---|
| த க் கா ளி | ச க் க ர ம் | பூ க் க ள் |
| ம ஞ் ச ள் | இ ஞ் சி | கி ளி ஞ் ச ல் |
| ப ச் சை | எ லு மி ச் சை | ஆ ந் தை |
| ஈ ச் ச ம் ப ழ ம் | மு ந் தி ரி | ப ந் து |
| பு த் த க ம் | ந த் தை | ம த் த ள ம் |
| தே ங் கா ய் | த ங் க ம் | ச லங் கை |

# வணக்கம்

பாடம்
4



## 4.1 பேசுவோம்



### சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| சிலம்பம் | சல்லிக்கட்டு | காற்றாடி | வாள் | செங்காந்தள் |
| பல்லாங்குழி | ஏர் | மீன் | யாழ் | இளநீர் |

## 4.2 மெய் எழுத்துகள்

தமிழ்மொழியில் மெய் எழுத்துகள் பதினெட்டு. இப்போது ம் முதல் ன் வரையுள்ள எழுத்துகளைப் படிப்போம்



## 4.3 அறிவோம்

ம்



மரம்



வானம்



பம் பரம்

ய்



வாய்



பாய்



நாய்

ர்



ஏர்



வேர்



தேநீர்

## 4.4 திரும்பப் படிப்போம்

| ம் | ய் | ர் |
|---|---|---|
| மரம் | வாய் | ஏர் |
| வானம் | பாய் | வேர் |
| பம்பரம் | நாய் | தேநீர் |

**புதிய சொற்கள்**

சோளம் தம்பி ஓநாய் மலர் வெள்ளம் மிளகாய்

## 4.5 சொல்லிப் பழகுவோம்



பம்பரம் சுற்று



தம்பி சிரி



ஓநாய் பார்



பாய் சுருட்டு



தேநீர் பருகு



ஏர் ஓட்டு

## 4.6 பயிற்சி

எழுத்தை நிரப்புவோம்

**ம்**



அ ___ மா



த ___ பி



ப ___ பரம்

**ய்**



பா ___



நா ___



மிளகா ___

**ர்**



ஏ ___



வே ___



தேநீ ___

## 4.7 அறிவோம்

### ல்




பால்



கடல்



நெல்

### வ்



செவ்வகம்



செவ்வானம்



செவ்வாழை

### ழ்



யாழ்



நீர்வீழ்ச்சி



அழைப்பிதழ்

## 4.8 திரும்பப் படிப்போம்

| ல் | வ் | ழ் |
|---|---|---|
| பால் | செவ்வகம் | யாழ் |
| கடல் | செவ்வானம் | நீர்வீழ்ச்சி |
| நெல் | செவ்வாழை | அழைப்பிதழ் |

**புதிய சொற்கள்**

| | | | |
|---|---|---|---|
| குயில் | வானவில் | செவ்வாய் | கேழ்வரகு |
| மயில் | சேவல் | செவ்வந்தி | தாழ்ப்பாள் |

## 4.9 சொல்லிப் பழகுவோம்


பால் குடி


வானவில் பார்


செவ்வாழை சுவை


செவ்வந்தி பறி


தமிழ் படி


யாழ் மீட்டு

## 4.10 பயிற்சிகள்

### (அ) சொல் உருவாக்குவோம்

பா, கா, ப, க → ல்

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________

### (ஆ) எழுத்தை நிரப்புவோம்

வ்

- செ_____ வகம்
- செ_____ வாழை
- செ_____ வாய்
- செ_____ வானம்

ழ்

- நீர்வீ_____ ச்சி
- கே_____ வரகு
- அழைப்பித_____
- யா_____

## 4.11 பாடி மகிழ்வோம்

### நத்தையாரே! நத்தையாரே!

நத்தையாரே! நத்தையாரே !

அத்தை வீடு பயணமோ?

அத்தை வீடு போக முதுகில்

தண்ணீர்க் குடம் வேணுமோ?

அத்தையார்க்கு நீர் சுமக்கும்

நத்தையாரே! வாருங்கள்!

மெத்த வழியில் நீரும் சிந்தும்

மெல்ல மெல்லச் செல்லுங்கள்!

- அழ. வள்ளியப்பா



## 4.12 அறிவோம்

### ள்



பள்ளி



முள்



தேள்

### ற்



நாற்காலி



காற்றாடி



வெற்றிலை

### ன்



தென்னை



மான்



தேன்

## 4.13 திரும்பப் படிப்போம்

| ள் | ற் | ன் |
|---|---|---|
| பள்ளி | நாற்காலி | தென்னை |
| முள் | காற்றாடி | மான் |
| தேள் | வெற்றிலை | தேன் |

**புதிய சொற்கள்**

பள்ளம் கற்கண்டு கன்று நாற்று தின்பண்டம்

## 4.14 சொல்லிப் பழகுவோம்



வாள் வீசலாம்



தேள் கொட்டும்



காற்றாடி சுழலும்



கீற்று அசையும்



தேன் இனிக்கும்



மான் ஓடும்

## 4.15 பயிற்சி

### நிரப்புவோம்

**ள்**

- மு _____
- தே _____
- ப ___ ளி
- வா _____

**ற்**

- வெ ___ றிலை
- நா ___ று
- கா ___ றாடி
- நா ___ காலி

**ன்**

- க ____ று
- தே _____
- மா ____
- தெ _____ னை

## 4.16 கேட்டல் கருத்தறிதல்

### மகிழ்வித்து மகிழ்



பாரதியின் பெற்றோருக்கு அன்று திருமணநாள். பெற்றோருக்கு வாழ்த்து கூறிய பாரதி, வேண்டுகோள் ஒன்றையும் வைத்தாள். அதாவது, சாலையோரம் வசிப்பவர்களுக்கு உணவும் உடையும் தரவேண்டும் என விரும்பினாள். பெற்றோரும் ஒப்புக்கொண்டனர். அவள் விரும்பியபடி புத்தாடைகள் வழங்கினர். பாரதியும் பெற்றோருடன் சேர்ந்து, தன் கையாலேயே பலருக்கும் உணவளித்து மகிழ்ந்தாள். அன்றைய நிகழ்வு அனைவருக்கும் மனநிறைவைத் தந்தது.

# 4.17 மெய்யெழுத்துகள்

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| வல்லோசை உடையது | மெல்லோசை உடையது | இரண்டிற்கும் இடைப்பட்டு ஒலிப்பது |
| க், ச், ட், த், ப், ற் | ங், ஞ், ண், ந், ம், ன் | ய், ர், ல், வ், ழ், ள் |
| தக்காளி | சங்கு | நாய் |
| எலுமிச்சை | பஞ்சு | ஏர் |
| பட்டம் | நண்டு | கடல் |
| மத்தளம் | தந்தம் | செவ்வாழை |
| கப்பல் | வானம் | யாழ் |
| காற்றாடி | தேன் | தேள் |

## 4.18 பயிற்சிகள்

(அ) மெய்யெழுத்துகளைக் கண்டுபிடித்து வட்டமிடுவோம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ப | ம் | ப | ர | ம் | செ | றா |
| ம | ப | மா | ன் | ந | வ் | தே |
| மி | ள | கா | ய் | ண் | வா | ர் |
| கா | ல் | மா | டு | டு | ழை | ழ் |
| லை | தே | ன் | ர் | க | ய் | யா |

(ஆ) எழுத்தை நிரப்புவோம்



| | | | | |
|---|---|---|---|---|
| ப | | ப | ர | ம் |



| | | | |
|---|---|---|---|
| மி | ள | கா | |



| | | | |
|---|---|---|---|
| இ | ள | நீ | |



| | | |
|---|---|---|
| க | ட | |



| | | | |
|---|---|---|---|
| செ | | வா | ழை |



| | |
|---|---|
| யா | |



| | |
|---|---|
| வா | |



| | | | |
|---|---|---|---|
| கா | | றா | டி |



| | |
|---|---|
| மா | |

# வணக்கம்

பாடம்
5



## 5.1 பேசுவோம்




### சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| கரகம் | நடனம் | ஊதல் | ஆலமரம் |
| பழங்கள் | அப்பளம் | மத்தளம் | பந்தல் |

## 5.2 உயிர்மெய் எழுத்துகள்

தமிழ் மொழியில் உயிர்மெய் எழுத்துகள் 216.

முதலில் க முதல் னீ வரையுள்ள எழுத்துகளைப் படிப்போம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ |
| ச் | ச | சா | சி | சீ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ |
| ட் | ட | டா | டி | டீ |
| ண் | ண | ணா | ணி | ணீ |
| த் | த | தா | தி | தீ |
| ந் | ந | நா | நி | நீ |
| ப் | ப | பா | பி | பீ |
| ம் | ம | மா | மி | மீ |
| ய் | ய | யா | யி | யீ |
| ர் | ர | ரா | ரி | ரீ |
| ல் | ல | லா | லி | லீ |
| வ் | வ | வா | வி | வீ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ |
| ள் | ள | ளா | ளி | ளீ |
| ற் | ற | றா | றி | றீ |
| ன் | ன | னா | னி | னீ |

## 5.3 அறிவோம்

**‘க’ முதல் ‘ன’ வரை அறிமுகம்**



க் + அ = க

கப்பல்

ங

ங் + அ = ங



ச் + அ = ச

சக்கரம்

ஞ

ஞ் + அ = ஞ



ட் + அ = ட

பட்டம்



ண் + அ = ண

பணம்



த் + அ = த

தந்தம்



ந் + அ = ந

நகம்



ப் + அ = ப

பம்பரம்



ம் + அ = ம

மத்தளம்



ய் + அ = ய

வயல்



ர் + அ = ர

கரகம்



ல் + அ = ல
உலகம்



வ் + அ = வ
வட்டம்



ழ் + அ = ழ
உழவர்



ள் + அ = ள
அப்பளம்



ற் + அ = ற
ஏற்றம்



ன் + அ = ன
அன்னம்

## 5.4 திரும்பப் படிப்போம்

### உயிர்மெய் எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| கப்பல் | சக்கரம் | பட்டம் | பணம் |
| தந்தம் | நகம் | பம்பரம் | மத்தளம் |
| வயல் | கரகம் | உலகம் | வட்டம் |
| உழவர் | அப்பளம் | ஏற்றம் | அன்னம் |

### புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| கண் | ஈரம் | கடல் |
| மணல் | பழங்கள் | பல் |

## 5.5 சொல்லிப் பழகுவோம்



ஏற்றம் இறை



பட்டம் விடு



நகம் வெட்டு



அப்பளம் தின்

## 5.6 பாடி மகிழ்வோம்

### அன்பு

பட்டை போடப் போடத்தான்
பளபளக்கும் வைரமே
மெருகு கொடுக்கக் கொடுக்கத்தான்
மினுமினுக்கும் தங்கமே

அரும்பு மலர மலரத்தான்
அளிக்கும் மணத்தை மலருமே
அன்பு பெருகப் பெருகத்தான்
அமைதி அடையும் உலகமே

- அழ. வள்ளியப்பா



## 5.7 பயிற்சி

### உரிய எழுத்தை எழுதுவோம்



____ப்பல்

| க | ம | ச |
|---|---|---|



____க்கரம்

| ய | ச | ப |
|---|---|---|



பட் ____ ம்

| ட | ஞ | ண |
|---|---|---|



ப ____ ம்

| க | ர | ண |
|---|---|---|



____ந்தம்

| ந | த | ப |
|---|---|---|



____கம்

| த | ந | ள |
|---|---|---|



பம்ப ____ ம்

| ச | ப | ர |
|---|---|---|



____த்தளம்

| ய | ம | ப |
|---|---|---|



வ ____ ல்

| ச | ய | வ |
|---|---|---|



க ____ கம்

| | | |
|---|---|---|
| ப | ர | ட |



____ ட்டம்

| | | |
|---|---|---|
| வ | ல | ந |



உ ____ வர்

| | | |
|---|---|---|
| ல | வ | ழ |



அப்ப ____ ம்

| | | |
|---|---|---|
| ள | ல | க |



ஏற் ____ ம்

| | | |
|---|---|---|
| ற | வ | ள |



அன் ____ ம்

| | | |
|---|---|---|
| ள | ன | ச |

## 5.8 பேசுவோம்



### சொற்கள்

| | | |
|---|---|---|
| தாயம் | நாய் | ஓநாய் |
| மான் | காகம் | காளான் |
| பலா | ஓணான் | பாய் |

## 5.9 அறிவோம்

**‘கா’ முதல் ‘னா’ வரை அறிமுகம்**



க் + ஆ = கா

காகம்

# ஙா

ங் + ஆ = ஙா



ச் + ஆ = சா

சாரல்

# ஞா

ஞ் + ஆ = ஞா

# டா

ட் + ஆ = டா



ண் + ஆ = ணா

ஓணான்



த் + ஆ = தா

தாத்தா



ந் + ஆ = நா

நாய்



ப் + ஆ = பா

பாப்பா



ம் + ஆ = மா

மான்



ய் + ஆ = யா

யாழ்



ர் + ஆ = ரா

ராகம்



ல் + ஆ = லா
பலாப்பழம்



வ் + ஆ = வா
வானம்

# ழா

ழ் + ஆ = ழா



ள் + ஆ = ளா
காளான்



ற் + ஆ = றா
இறால்

# ணா

ன் + ஆ = னா

## 5.10 திரும்பப் படிப்போம்

### உயிர்மெய் எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| காகம் | சாரல் | ஓணான் | தாத்தா |
| நாய் | பாப்பா | மான் | ராகம் |
| பலாப்பழம் | வானம் | காளான் | இறால் |

### புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| கால் | பால் | மாம்பழம் |
| தாவரம் | வாரம் | |

## 5.11 சொல்லிப் பழகுவோம்



பெரிய பலா



சிறிய இறால்



அழகிய மான்



இனிய ராகம்

## 5.12 பயிற்சிகள்

(அ) முதல் எழுத்தை மாற்றி எழுதுவோம்



**கல்**



**கால்**



_____ ல்




_____ ல்



_____ கம்



_____ கம்



_____ டம்



_____ டம்

## (ஆ) விடுபட்ட எழுத்தை எழுதுவோம்



_____ கம்



_____ த்தா



_____ ப்பா



ஓ _____ ன்



_____ னம்



_____ ய்



_____ ன்



கா _____ ன்



_____ ழ்



இ _____ ல்



_____ ரல்



ப _____ ப்பழம்

# 5.13 பேசுவோம்



**சொற்கள்**

சிங்கம் நரி பன்றி மயில் கிளி அணில் எலி கரடி நாற்காலி

## 5.14 அறிவோம்

**'கி' முதல் 'னி' வரை அறிமுகம்**



க் + இ = கி
கிண்ணம்

# ஙி

ங் + இ = ஙி



ச் + இ = சி
சிங்கம்

# ஞி

ஞ் + இ = ஞி



ட் + இ = டி
பாட்டி



ண் + இ = ணி
மணி



த் + இ = தி
தின்பண்டம்



ந் + இ = நி
நிலா



ப் + இ = பி
பின்னல்



ம் + இ = மி
மிளகாய்



ய் + இ = யி
மயில்



ர் + இ = ரி
நரி



ல் + இ = லி
பல்லி



வ் + இ = வி
விமானம்



ழ் + இ = ழி
வழி



ள் + இ = ளி
வாளி



ற் + இ = றி
பன்றி



ன் + இ = னி
மாங்கனி

## 5.15 திரும்பப் படிப்போம்

### உயிர்மெய் எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| கிண்ணம் | சிங்கம் | பாட்டி | மணி |
| தின்பண்டம் | நிலா | பின்னல் | மிளகாய் |
| மயில் | நரி | பல்லி | விமானம் |
| வழி | வாளி | பன்றி | மாங்கனி |

### புதிய சொற்கள்

கிளி கட்டில் மின்விசிறி

வானவில் காகிதம்

## 5.16 சொல்லிப் பழகுவோம்



அழகான மயில்



சுவையான தின்பண்டம்



வெண்மையான நிலா



நீளமான விமானம்

## 5.17 பயிற்சிகள்

### (அ) விடுபட்ட எழுத்தை எழுதுவோம்



_____ ண்ணம்



_____ ங்கம்



ம _____



_____ ளகாய்



_____ ன்பண்டம்



பல் _____



பன் _____



வா _____

மி | சி | லி | கி | ணி | ளி | றி | தி

(ஆ) படத்திற்குரிய முதல் எழுத்தை வட்டமிடுவோம்.



நி கி தி



மி சா சி



ச வி க



பி கி மி



கி நி தி



தி லி பி

## 5.18 பேசுவோம்




**சொற்கள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கீழடி | கீறல் | மீன் | தீ | இளநீர் | தண்ணீர் | வீதி |

## 5.19 அறிவோம்

**'கீ' முதல் 'னீ' வரை அறிமுகம்**



# ஙீ



க் + ஈ = கீ
கீரி

ங் + ஈ = ஙீ

ச் + ஈ = சீ
சீத்தாப்பழம்

# ஞீ

# டீ



ஞ் + ஈ = ஞீ

ட் + ஈ = டீ

ண் + ஈ = ணீ
தண்ணீர்







த் + ஈ = தீ
தீபம்

ந் + ஈ = நீ
நீச்சல்

ப் + ஈ = பீ
பீர்க்கங்காய்



# யீ



ம் + ஈ = மீ
மீன்

ய் + ஈ = யீ

ர் + ஈ = ரீ
கிரீடம்

லீ

ல் + ஈ = லீ



வ் + ஈ = வீ

வீரன்

ழீ

ழ் + ஈ = ழீ

ளீ

ள் + ஈ = ளீ

றீ

ற் + ஈ = றீ

னீ

ன் + ஈ = னீ

## 5.20 திரும்பப் படிப்போம்

### உயிர்மெய் எழுத்துகள்

| | | |
|---|---|---|
| கீரி | சீத்தாப்பழம் | தண்ணீர் |
| தீபம் | நீச்சல் | பீர்க்கங்காய் |
| மீன் | கிரீடம் | வீரன் |

### புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| சீரகம் | நீலம் | வீரம் |
| பன்னீர் | சதவீதம் | விண்மீன் |

## 5.21 சொல்லிப் பழகுவோம்

|  |  |  |  |
|---|---|---|---|
| தண்ணீர் குடி | நீச்சல் பழகு | மீன் பிடி | தீபம் ஏற்று |

## 5.22 பயிற்சிகள்

### (அ) சொல் உருவாக்குவோம்

கீ

- முடி ____________
- தம் ____________
- ரி ____________
- றல் ____________

### (ஆ) ஈ வரிசை எழுத்துகளை வட்டமிடுவோம்

| | | | | |
|---|---|---|---|---|
| தீ | ஙீ | வ | மீ | ணீ |
| சீ | அ | கி | சி | இ |
| ழ | னி | நீ | தி | டீ |
| டி | யீ | யி | லி | ரீ |

### (இ) பொருத்துவோம்

|  |  |  |  |
|---|---|---|---|
| ○ | ○ | ○ | ○ |
| ○ | ○ | ○ | ○ |
| மீன் | கிரீடம் | தண்ணீர் | நீச்சல் |

## 5.23 கேட்டல் கருத்தறிதல்

**புகழ்ச்சிக்கு மயங்காதே!**






சுறாமீன் டிங்கோ மிகவும் வலிமை உடையதாக இருந்தது. அது, குட்டிமீன்களைத் தின்று உயிர் வாழ்ந்தது. அதனால், குட்டிமீன்கள் வருத்தம் அடைந்தன. அவை தமக்குள் பேசி, பிரச்சனையைத் தீர்க்க முடிவு செய்தன. அப்போது, அந்தக் கூட்டத்தில் இருந்த நீனோ என்னும் குட்டிமீன் முன்வந்தது. அது, டிங்கோவிற்குத் தக்க பாடம் புகட்டுவேன் என்று கூறியது. ஒரு நாள் அந்தக் கடலில் மீனவர்கள் வலை வீசினர். இதுதான் சரியான நேரம் என்று நீனோ நினைத்தது. மீனவர்களின் வலையைப் 'பெரிய வீடு' என டிங்கோவிடம் கூற முடிவு செய்தது. ஆகவே நீனோ, உடனே டிங்கோவிடம் சென்றது. அது டிங்கோவைப் பார்த்து, "நீ மிகவும் பலசாலி அல்லவா! அதனால்தான் உன் பிறந்த நாளுக்காகப் பெரிய வீட்டைப் பரிசாகத் தருகிறோம். வா, அந்த வீட்டைக் காட்டுகிறேன்" என்று கூறியது. நீனோவின் புகழ்ச்சிக்கு டிங்கோ மயங்கியது. அது மீனவர் வலைக்குள் சிக்கிக்கொண்டது.

# வணக்கம்

பாடம் 6



## 6.1. பேசுவோம்




### சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காடு | உணவு | துணி | குரங்கு | நுங்கு | புல் |
| முயல் | கிழங்கு | பசு | கரும்பு | ஆடு | |

## 6.2 உயிர்மெய் எழுத்துகள்

தமிழ் மொழியில் உயிர்மெய் எழுத்துகள் 216. இப்போது கு முதல் னே வரையுள்ள எழுத்துகளைப் படிப்போம்

| | உ | ஊ | எ | ஏ |
|---|---|---|---|---|
| க் | கு | கூ | கெ | கே |
| ங் | ஙு | ஙூ | ஙெ | ஙே |
| ச் | சு | சூ | செ | சே |
| ஞ் | ஞு | ஞூ | ஞெ | ஞே |
| ட் | டு | டூ | டெ | டே |
| ண் | ணு | ணூ | ணெ | ணே |
| த் | து | தூ | தெ | தே |
| ந் | நு | நூ | நெ | நே |
| ப் | பு | பூ | பெ | பே |
| ம் | மு | மூ | மெ | மே |
| ய் | யு | யூ | யெ | யே |
| ர் | ரு | ரூ | ரெ | ரே |
| ல் | லு | லூ | லெ | லே |
| வ் | வு | வூ | வெ | வே |
| ழ் | ழு | ழூ | ழெ | ழே |
| ள் | ளு | ளூ | ளெ | ளே |
| ற் | று | றூ | றெ | றே |
| ன் | னு | னூ | னெ | னே |

## 6.3 அறிவோம்

### 'கு' முதல் 'னு' வரை அறிமுகம்



க் + உ = கு

குரங்கு

# ஙு

ங் + உ = ஙு



ச் + உ = சு

பசு

# ஞு

ஞ் + உ = ஞு



ட் + உ = டு

ஆடு



ண் + உ = ணு

கணுக்கால்



த் + உ = து

பந் து



ந் + உ = நு

நுங்கு



ப் + உ = பு

புலி



ம் + உ = மு

முயல்



ய் + உ = யு

ஆயுதம்



ர் + உ = ரு

கரும்பு



ல் + உ = லு
வில்லுப்பாட்டு



வ் + உ = வு
கதவு



ழ் + உ = ழு
கழுகு



ள் + உ = ளு
திருவள்ளுவர்



ற் + உ = று
கிணறு

னு

ன் + உ = னு

## 6.4 திரும்பப் படிப்போம்

### உயிர்மெய் எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| குரங்கு | பசு | ஆடு | கணுக்கால் |
| பந்து | நுங்கு | புலி | முயல் |
| ஆயுதம் | கரும்பு | கதவு | கழுகு |
| திருவள்ளுவர் | வில்லுப்பாட்டு | கிணறு | |

### புதிய சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| புல் | வீடு | பட்டு | பருந்து |
| விருந்து | உளுந்து | புத்தகம் | கணக்கு |
| முந்திரி | வயிறு | | |

## 6.5 சொல்லிப் பழகுவோம்



ஆடு கத்தும்



கழுகு பறக்கும்



புலி பாயும்



குரங்கு தாவும்

## 6.6 பாடி மகிழ்வோம்

### ஒளிபடைத்த கண்ணினாய்...

ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா

உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா

களிபடைத்த மொழியினாய் வா வா வா

கடுமை கொண்ட தோளினாய் வா வா வா

தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா

சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா

எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா

ஏறுபோல் நடையினாய் வா வா வா

- பாரதியார்



## 6.7 பயிற்சி

### (அ) உரிய எழுத்தை எழுதுவோம்



____ ரங்கு

| | | |
|---|---|---|
| க | ம | கு |



____ லி

| | | |
|---|---|---|
| ய | பு | ப |



ப ____

| | | |
|---|---|---|
| சு | ஞ | ண |



____ யல்

| | | |
|---|---|---|
| ப | ர | மு |

### (ஆ) விரும்பிச் செய்வேன்

**வாலைக் கண்டு விலங்கைச் சொல்வேன்**









## 6.8 பேசுவோம்



### சொற்கள்

| | | |
|---|---|---|
| சூரியன் | மூங்கில் | கூடு |
| பூ | தூண்டில் | பலூன் |

## 6.9 அறிவோம்.

'கூ' முதல் 'னூ' வரை அறிமுகம்



ஙூ



க் + ஊ = கூ
கூண்டு

ங் + ஊ = ஙூ

ச் + ஊ = சூ
சூரியன்

ஞூ



ணூ

ஞ் + ஊ = ஞூ

ட் + ஊ = டூ
குண்டூசி

ண் + ஊ = ணூ







த் + ஊ = தூ
தூண்டில்

ந் + ஊ = நூ
நூலகம்

ப் + ஊ = பூ
பூட்டு



யூ



ம் + ஊ = மூ
மூன்று

ய் + ஊ = யூ

ர் + ஊ = ரூ
ரூபாய்



ல் + ஊ = லூ
பலூன்

வூ

வ் + ஊ = வூ

ழூ

ழ் + ஊ = ழூ

ளூ

ள் + ஊ = ளூ

றூ

ற் + ஊ = றூ



ன் + ஊ = னூ
வானூர்தி

## 6.10 திரும்பப் படிப்போம்

### உயிர்மெய் எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| கூண்டு | சூரியன் | குண்டூசி | தூண்டில் |
| நூலகம் | பூட்டு | மூன்று | ரூபாய் |
| பலூன் | வானூர்தி | | |

### புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| பூமி | பீட்ரூட் | நூல்கள் |
| கல்லூரி | நீரூற்று | |

## 6.11 சொல்லிப் பழகுவோம்



பலூன் ஊது



நூல்கள் படி



கூண்டு செய்



தூண்டில் போடு

## 6.12 பயிற்சிகள்

(அ) எழுத்தை நிரப்புவோம்

| | | |
|---|---|---|
| 1. | ___ ரியன் | (சூ / கூ) |
| 2. | குண் ___ சி | (ணூ / டூ) |
| 3. | ___ லகம் | (நூ / ரூ) |
| 4. | ___ ண்டில் | (தூ / மூ) |
| 5. | ___ ண்டு | (கூ / லூ) |
| 6. | ப ___ ன் | (லூ / தூ) |

(ஆ) குறில் நெடில் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. | சுடு | - | சூடு |
| 2. | குண்டு | - | கூண்டு |
| 3. | முட்டு | - | மூட்டு |
| 4. | விடு | - | வீடு |

## 6.13 நானே படிப்பேன்



1. ஒரு மூங்கில் மரம் இருந்தது. அதில், குருவிகள் கூடு கட்டி வசித்தன.



2. மரத்திற்கு அருகில் ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டில் கூண்டுடன் கிளி ஒன்றை வாங்கி வந்தனர்.



3. குருவிகளும் கிளியும் நண்பர்கள் ஆயின



4. கிளி, கூண்டில் இருந்தது. அதனால், தினமும் உணவும் பழங்களும் தந்தனர்.


ஏன் வருத்தமாக இருக்கிறாய்?
பறக்க முடியாமல் சிரமமாக இருக்கிறது.
திறந்து விடட்டுமா?
ம்ம்ம்... ஆனால், சாவி?


அந்தத் தூணில்
இடித்துத்
திறக்கலாம்.
நம்மால்
முடியுமா?


அட! பூட்டு
திறந்துவிட்டது.
இனி நீ பறக்கலாம்.
உதவிக்கு மிக்க
நன்றி! எனக்கு இனி
மகிழ்ச்சி!

## 6.14 பேசுவோம்

### சொற்கள்

| | |
|---|---|
| கட்டெறும்பு | சுண்டெலி |
| வெண்ணெய் | வெல்லம் |
| வெங்காயம் | மெழுகுவத்தி |



## 6.15 அறிவோம்.

'கெ' முதல் 'னெ' வரை அறிமுகம்



க் + எ = கெ
கெண்டி

ஙெ

ங் + எ = ஙெ



ச் + எ = செ
செங்கல்

ஞெ

ஞ் + எ = ஞெ



ட் + எ = டெ
சுண்டெலி




ண் + எ = ணெ
வெண்ணெய்



த் + எ = தெ
தெரு



ந் + எ = நெ
நெல்



ப் + எ = பெ
பெட்டி



ம் + எ = மெ
மெழுகுவத்தி

யெ

ய் + எ = யெ

ரெ

ர் + எ = ரெ

# லெ

ல் + எ = லெ



வ் + எ = வெ

வெங்காயம்

# ழெ

ழ் + எ = ழெ

# ளெ

ள் + எ = ளெ

# றெ

ற் + எ = றெ

# னெ

ன் + எ = னெ

## 6.16 திரும்பப் படிப்போம்

### உயிர்மெய் எழுத்துகள்

| | | |
|---|---|---|
| கெண்டி | செங்கல் | சுண்டெலி |
| வெண்ணெய் | தெரு | நெல் |
| பெட்டி | மெழுகுவத்தி | வெங்காயம் |

### புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| செடி | நெற்றி | பெண் |
| எண்ணெய் | செந்தமிழ் | வெயில் |

## 6.17 சொல்லிப் பழகுவோம்



மெழுகுவத்தி ஏற்றலாம்



வெங்காயம் வாங்கலாம்




வெண்ணெய் உண்ணலாம்



நெல் விதைக்கலாம்

## 6.18 பயிற்சி

### பொருத்துவோம்




○ ○ சுண்டெலி



○ ○ வெங்காயம்



○ ○ பெட்டி



○ ○ வெண்ணெய்

## 6.19 பேசுவோம்



### சொற்கள்

| | |
|---|---|
| கேழ்வரகு | தேங்காய் |
| மேகம் | வேர் |
| சேவல் | தேன்கூடு |

## 6.20 அறிவோம்.

'கே' முதல் 'னே' வரை அறிமுகம்



க் + எ = கே
கேழ்வரகு

நே

ங் + எ = ஙே



ச் + எ = சே
சேவல்

ஞே

ஞ் + எ = ஞே

டே

ட் + எ = டே

ணே

ண் + எ = ணே



த் + எ = தே
தேங்காய்




ந் + எ = நே
நேரம்



ப் + எ = பே
பேரிக்காய்



ம் + எ = மே
மேகம்

யே

ய் + எ = யே

ரே

ர் + எ = ரே

# லே

ல் + ஏ = லே



வ் + ஏ = வே

வேர்

# ழே

ழ் + ஏ = ழே

# ளே

ள் + ஏ = ளே

# றே

ற் + ஏ = றே

# னே

ன் + ஏ = னே

## 6.21 திரும்பப் படிப்போம்

### உயிர்மெய் எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| கேழ்வரகு | சேவல் | தேங்காய் | நேரம் |
| பேரிக்காய் | மேகம் | வேர் | |

### புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| பேருந்து | மேளம் | தேக்கு மரம் |
| வேம்பு | நேற்று | |

## 6.22 சொல்லிப் பழகுவோம்



மேசை செய்




நேரம் பார்



பேரிக்காய் பறி



தேங்காய் உடை

## 6.23 பயிற்சி

### எழுத்தை நிரப்புவோம்



______ழ்வரகு



______ரிக்காய்



______வல்



______கம்



______ங்காய்

## 6.24 கேட்டல் கருத்தறிதல்

### தமிழ்ப் பள்ளி



கவின் : இனியா! எங்க போற?

இனியன் : தமிழ்ப் பள்ளிக்குப் போறேன், கவின்.

கவின் : தமிழ் படிக்க எளிமையா இருக்கா?

இனியன் : கவின், தமிழ் ரொம்ப எளிமையாதான் இருக்கு. எனக்கு இப்போ உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் எழுதவும் படிக்கவும் தெரியும்.

கவின் : ஓ... இவ்ளோ சீக்கிரமாவா? இன்னும் என்னலாம் சொல்லிக்குடுத்தாங்க?

இனியன் : தமிழ்ல பாட்டுகூடப் பாடுவேன். ஆறு பாட்டு தெரியும்.

கவின் : அட! இவ்ளோ தெரியுமா? கேட்கவே ஆசையா இருக்கு இனியா. நானும் சேரலாமா?

இனியன் : நாளைக்கே நீயும் சேர்ந்துடு, கவின்.

பாடம் 7

# வணக்கம்



## 7.1 பேசுவோம்



**சொற்கள்**

| | | |
|---|---|---|
| ஆமை | மைனா | குதிரை |
| தவளை | தாமரை | குடை |

## 7.2 உயிர்மெய் எழுத்துகள்

தமிழ் மொழியில் உயிர்மெய் எழுத்துகள் 216. இப்போது கை முதல் னௌ வரையுள்ள எழுத்துகளைப் படிப்போம்.

| | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|
| க் | கை | கொ | கோ | கௌ |
| ங் | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | டை | டொ | டோ | டௌ |
| ண் | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | தை | தொ | தோ | தௌ |
| ந் | நை | நொ | நோ | நௌ |
| ப் | பை | பொ | போ | பௌ |
| ம் | மை | மொ | மோ | மௌ |
| ய் | யை | யொ | யோ | யௌ |
| ர் | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | லை | லொ | லோ | லௌ |
| வ் | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | றை | றொ | றோ | றௌ |
| ன் | னை | னொ | னோ | னௌ |

## 7.3 அறிவோம்

### 'கை' முதல் 'னை' வரை அறிமுகம்



# ஙை



க் + ஐ = கை
கைக்கடிகாரம்

ங் + ஐ = ஙை

ச் + ஐ = சை
பச்சைக்கிளி

# ஞை





ஞ் + ஐ = ஞை

ட் + ஐ = டை
குடை

ண் + ஐ = ணை
வீணை



# நை



த் + ஐ = தை
சிறுத்தை

ந் + ஐ = நை

ப் + ஐ = பை
பையன்



# யை



ம் + ஐ = மை
ஆமை

ய் + ஐ = யை

ர் + ஐ = ரை
தாமரை



ல் + ஐ = லை
மாலை



வ் + ஐ = வை
ஔவையார்



ழ் + ஐ = ழை
வாழை



ள் + ஐ = ளை
தவளை



ற் + ஐ = றை
பறை



ன் + ஐ = னை
யானை

## 7.4 திரும்பப் படிப்போம்

### உயிர்மெய் எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| கைக்கடிகாரம் | பச்சைக்கிளி | குடை | வீணை |
| சிறுத்தை | பையன் | ஆமை | தாமரை |
| மாலை | ஔவையார் | வாழை | தவளை |
| பறை | யானை | | |

### புதிய சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| மல்லிகைப்பூ | ஆந்தை | பூனை | பாறை |
| கதை | ஆடை | தலையணை | பானை |
| குதிரை | | | |

## 7.5 சொல்லிப் பழகுவோம்



யானை பிளிறும்



தவளை கத்தும்



ஆந்தை அலறும்



குதிரை கனைக்கும்

## 7.6 பாடி மகிழ்வோம்

### உலகநீதி

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டா
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டா
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டா
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டா
போகாத இடந்தனிலே போக வேண்டா
போகவிட்டுப் புறம் சொல்லித் திரிய வேண்டா

- உலகநாதர்



## 7.7 பயிற்சி

### நிரப்புவோம்





______க்கடிகாரம்

பச்______க்கிளி





கு ______

சிறுத் ______





ஆ ______

______யன்



தாம ______



மா ______



ஔ ______



தவ ______



ப ______



யா ______

## 7.8 பேசுவோம்




### சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| வானொலி | சுவரொட்டி | பொங்கல் | கொண்டாட்டம் |
| கொக்கு | தொப்பி | நீர்த்தொட்டி | |

## 7.9 அறிவோம்.

'கொ' முதல் 'னொ' வரை அறிமுகம்



க் + ஒ = கொ

கொக்கு

# ஙொ

ங் + ஒ = ஙொ

# சொ

ச் + ஒ = சொ

# ஞொ

ஞ் + ஒ = ஞொ

# டொ

ட் + ஒ = டொ

# ணொ

ண் + ஒ = ணொ



த் + ஒ = தொ

தொப்பி

# நொ

ந் + ஒ = நொ



ப் + ஒ = பொ

பொங்கல்



ம் + ஒ = மொ

மொட்டு

# யொ

ய் + ஒ = யொ



ர் + ஒ = ரொ

ரொட்டி

# லொ வொ ழொ

ல் + ஒ = லொ

வ் + ஒ = வொ

ழ் + ஒ = ழொ

# ளொ றொ

ள் + ஒ = ளொ

ற் + ஒ = றொ



ன் + ஒ = னொ

வானொலி

## 7.10 திரும்பப் படிப்போம்

### உயிர்மெய் எழுத்துகள்

| | | |
|---|---|---|
| கொக்கு | தொப்பி | பொங்கல் |
| மொட்டு | ரொட்டி | வானொலி |

### புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| கொடி | சொல் | தொடர்வண்டி |
| பொம்மை | மொழி | காணொலி |

## 7.11 சொல்லிப் பழகுவோம்



வானொலி கேட்கலாம்



தொப்பி அணியலாம்



பொங்கல் வைக்கலாம்



ரொட்டி சாப்பிடலாம்

## 7.12 பயிற்சிகள்

### எழுத்தை நிரப்புவோம்



கொ
தொ
_______ ப்பி



மொ
யொ
_______ ட்டு



சொ
கொ
_______ க்கு



பொ
மொ
_______ ங்கல்

### (ஆ) சொற்களைக் கட்டடத்தில் எழுதுவோம்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

கொக்கு பொங்கல் மொட்டு தொப்பி

## 7.13 பேசுவோம்




**சொற்கள்**

கோலம் | சோளம் | தோரணம் | போர்வை | மோர்

## 7.14 அறிவோம்

### 'கோ' முதல் 'னோ' வரை அறிமுகம்



க் + ஓ = கோ
கோழி

ஙோ

ங் + ஓ = ஙோ



ச் + ஓ = சோ
சோளம்

ஞோ

ஞ் + ஓ = ஞோ

டோ

ட் + ஓ = டோ

ணோ

ண் + ஓ = ணோ



த் + ஓ = தோ
தோரணம்

நோ

ந் + ஓ = நோ



ப் + ஓ = போ
போர்வை



ம் + ஓ = மோ
மோதிரம்

யோ

ய் + ஓ = யோ

ரோ

ர் + ஓ = ரோ

# லோ வோ ழோ

ல் + ஓ = லோ　　வ் + ஓ = வோ　　ழ் + ஓ = ழோ

# ளோ றோ னோ

ள் + ஓ = ளோ　　ற் + ஓ = றோ　　ன் + ஓ = னோ

## 7.15 திரும்பப் படிப்போம்

### உயிர்மெய் எழுத்துகள்

கோழி　　சோளம்　　தோரணம்

போர்வை　　மோதிரம்

### புதிய சொற்கள்

சோறு　　தோட்டம்　　போட்டி

பெற்றோர்　　நோக்கம்

## 7.16 சொல்லிப் பழகுவோம்



சோளம் சாப்பிடு



தோரணம் கட்டு



மோதிரம் அணி



போர்வை மடி

## 7.17 பயிற்சிகள்

(அ) சொற்களைக் கண்டுபிடித்து வட்டமிட்டு எழுதுவோம்

| | | | | |
|---|---|---|---|---|
| கோ | போ | தோ | டு | சோ |
| ழி | ர் | ர | தோ | ள |
| ம் | வை | ண | ழ | ம் |
| சோ | மோ | தி | ர | ம் |

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________

(ஆ) பொருத்துவோம்

| | | |
|---|---|---|
| கோ | தோரணம் |  |
| சோ | கோழி |  |
| தோ | போர்வை |  |
| மோ | சோளம் |  |
| போ | மோதிரம் |  |

## 7.18 பேசுவோம்



**சொற்கள்**

பௌர்ணமி கௌதாரி வௌவால்

7.19 அறிவோம்

## 'கௌ' முதல் 'னௌ' வரை அறிமுகம்



# ஙௌ



க் + ஔ = கௌ
கௌதாரி

ங் + ஔ = ஙௌ

ச் + ஔ = சௌ
சௌசௌ

# ஞௌ

ஞ் + ஔ = ஞௌ

# டௌ

ட் + ஔ = டௌ

# ணௌ

ண் + ஔ = ணௌ

# தௌ

த் + ஔ = தௌ

# நௌ

ந் + ஔ = நௌ



ப் + ஔ = பௌ
பௌர்ணமி

# மௌ

ம் + ஔ = மௌ

# யௌ

ய் + ஔ = யௌ

# ரௌ

ர் + ஔ = ரௌ

# லௌ



# ழௌ

ல் + ஔ = லௌ

வ் + ஔ = வௌ

வௌவால்

ழ் + ஔ = ழௌ

# ளௌ

# றௌ

# னௌ

ள் + ஔ = ளௌ

ற் + ஔ = றௌ

ன் + ஔ = னௌ

## 7.20 திரும்பப் படிப்போம்

**உயிர்மெய் எழுத்துகள்**

| | |
|---|---|
| கௌதாரி | சௌசௌ |
| பௌர்ணமி | வௌவால் |

## 7.21 சொல்லிப் பழகுவோம்



வெண்மையான பௌர்ணமி



பசுமையான புல்வெளி

## 7.22 விரும்பிச் செய்வேன்

என் பெயரை நானே எழுதுவேன்



## 7.23 கிரந்த எழுத்துகள்

ஜ, ஸ, ஷ, க்ஷ, ஹ, ஸ்ரீ



## 7.24 பேசுவோம்



## 7.25 அறிவோம்



குலாப்ஜாமுன்



ஜிலேபி



பாதுஷா



ரஸகுல்லா

## 7.26 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| குலாப்ஜாமுன் | ஜிலேபி |
| பாதுஷா | ரஸகுல்லா |

### புதிய சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| ஜிகர்தண்டா | ஜோடி | ஸ்ரீநகர் | சர்க்கஸ் |
| காஷ்மீர் | ஐஸ்கிரீம் | ஜவ்வரிசி | |
| ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | |

## 7.27 சொல்லிப் பழகுவோம்



சர்க்கஸ் பார்க்கலாம்



ஐஸ்கிரீம் சாப்பிடலாம்



குலாப்ஜாமுன் சுவைக்கலாம்



பாதுஷா வாங்கலாம்

## 7.28 பயிற்சிகள்

### (அ) நிரப்புவோம்



பாது ______

| | |
|---|---|
| ஷா | ஹ |



குலாப்______ முன்

| | |
|---|---|
| ஜா | ஹ |



ஐ ______ கிரீம்

| | |
|---|---|
| ஷ் | ஸ் |



ர______ குல்லா

| | |
|---|---|
| ஹ | ஸ |

### (ஆ) உரிய எழுத்துகளை எடுத்து எழுதுக. (ஜூ, ஷ், ஸ், ஜி)

1 ______ லேபி

2. பு ______ பம்

3. ______ லை

4. ராஜ ______ தான்

## 7.29 கேட்டல் கருத்தறிதல்

### புத்தகம் படிப்போமா!



வளவனும் தாத்தாவும் புத்தகக் கடைக்குச் சென்றனர். அங்கே வளவன், ஹரிஷையும் ஹரிணியையும் சந்தித்தான். ஹரிணி ஹாரிபாட்டர், ஜங்கிள்புக் டைனோஸரஸ் புத்தகங்களை வாங்கினாள். தாத்தா, அவர்களிடம் "திருக்குறள் புத்தகங்களும் வாங்கலாமே" என்றார். அவர்கள், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். "திருக்குறளில் நிறைய கருத்துகள் உள்ளன. ஒருமுறை படித்துப் பாருங்களேன்" என்றார் தாத்தா. அவர்கள், திருக்குறள் புத்தகத்தை ஆர்வத்துடன் கேட்டு வாங்கினர். வளவன் தாத்தாவைப் பெருமையுடன் பார்த்தான். அவர்கள் வீடு திரும்பினர்.

# வணக்கம்

பாடம்
8



## 8.1 பேசுவோம்

### உறவுப் பெயர்கள்



## 8.2 அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| தாத்தா | - Grandfather | அண்ணன் | - Elder Brother |
| பாட்டி | - Grandmother | அக்கா | - Elder Sister |
| அப்பா | - Father | தம்பி | - Younger Brother |
| அம்மா | - Mother | தங்கை | - Younger Sister |

## 8.3 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| தாத்தா | அண்ணன் |
| பாட்டி | அக்கா |
| அப்பா | தம்பி |
| அம்மா | தங்கை |

## 8.4 சொல்லிப் பழகுவோம்



தாத்தா நிற்கிறார்



தங்கை வரைகிறாள்

## 8.5 பாடி மகிழ்வோம்

### செடி வளர்ப்பேன்





தாத்தா வைத்த தென்னையுமே

தலையால் இளநீர் தருகிறது

பாட்டி வைத்த கொய்யாவும்

பழங்கள் நிறைய கொடுக்கிறது



அப்பா வைத்த மாஞ்செடியோ

அல்வா போலப் பழம்தருது



அம்மா வைத்த முருங்கையுமே

அளவில் லாமல் காய்க்கிறது





அண்ணன் வைத்த மாதுளையோ

கிண்ணம் போலப் பழுக்கிறது

சின்னஞ் சிறுவன் நானும் ஒரு

செடியை நட்டு வளர்ப்பேனே!

-அழ.வள்ளியப்பா

## 8.6 பயிற்சிகள்

### 1. சொல்லை நிரப்புவோம்

1. என் தந்தையுடன் பிறந்த பெண் எனக்கு __________ ஆவார்.

2. என் தாயுடன் பிறந்த ஆண் எனக்கு __________ ஆவார்.

3. என் Grandmother ஐத் தமிழில் ___________ என்று அழைப்பேன்.

4. எங்கள் வீட்டில் எனக்கு முன் பிறந்த ஆணை __________ என்று அழைப்பேன்.

5. எனக்குப் பின் பிறந்த பெண்ணைத் __________ என்று அழைப்பேன்.

பாட்டி, அண்ணன், அத்தை, தங்கை, மாமா

### 2. பொருத்துவோம்

| | | | |
|---|---|---|---|
| தாத்தா | ○ | ○ | சித்தி |
| அப்பா | ○ | ○ | மாமா |
| அண்ணன் | ○ | ○ | பாட்டி |
| சித்தப்பா | ○ | ○ | அம்மா |
| அத்தை | ○ | ○ | அண்ணி |

## 8.7 மீள்பார்வை

### பயிற்சிகள்

1. படங்களுக்குரிய முதல் எழுத்துகளைச் சொல்வேன்













2. படங்களுக்குரிய இறுதி எழுத்துகளைச் சொல்வேன்













3. உயிர் எழுத்துகளைப் படித்துக் காட்டுவேன்

அறம் செய விரும்பு

ஆறுவது சினம்

இயல்வது கரவேல்

ஈவது விலக்கேல்

4. மெய் எழுத்துகளைப் படித்துக் காட்டுவேன்

1. திருவள்ளுவர்
2. பாரதிதாசன்
3. பாரதியார்
4. ஔவையார்
5. தூரன்

5. உயிர் எழுத்துகளை வட்டமிடுவேன்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அ | க் | ச் | ட் | இ | ஈ | உ | ஊ |
| ங் | ஆ | ம் | எ | ற் | ந் | ன் | ஏ |

6. குறில் எழுத்துகளை வட்டமிடுவேன்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆ | ப் | ச் | ட் | இ | ஈ | உ | ஊ |
| ங் | அ | எ | ற் | ந் | ன் | ஒ | ஏ |

7. மெய் எழுத்துகளை எழுதுவேன்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜ | மை | அ | ய் | ஊ | த | வொ |
| தே | ஒ | ர் | வ் | ந் | ஓ | க |
| ஈ | ல் | ச் | ங் | ஆ | ஔ | கோ |

________ ________ ________ ________ ________

________ ________

8. நெடில் எழுத்துகளை எழுதுவேன்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜ | மை | அ | ய் | ஊ | த | வொ |
| தே | ஒ | ர் | வ் | ந் | ஓ | க |
| ஈ | ல் | ச் | ங் | ஆ | ஔ | கோ |

________ ________ ________ ________

________ ________ ________ ________

9. விடுபட்ட வல்லின மெய் எழுத்துகளை எழுதுவேன்

க் _____ ட் _____ ப் _____.

10. விடுபட்ட மெல்லின மெய் எழுத்துகளை எழுதுவேன்

_____ ஞ் _____ ந் ம் _____.

## 11. படத்தைப் பார்த்து ஐந்து சொல் கூறுவேன்



12. மெய் எழுத்துகளைச் சொல்வேன்



ஒட்டகம்



பட்டம்



தந்தம்



ஏற்றம்



சக்கரம்



பச்சைக்கிளி

13. உயிர்மெய் எழுத்துகளை ஒலித்துக் காட்டுவேன்

ஒளி படைத்த கண்ணினாய் வா! வா!

உறுதிகொண்ட நெஞ்சினாய் வா! வா!

14. வண்ணமிட்ட எழுத்துகளை ஒலித்துக் காட்டுவேன்

1. ஓதாமல் 2. மூங்கில் 3. பூஞ்செடி

4. பலூன் 5. தொண்ணூறு

15. விடுபட்ட இடையின மெய் எழுத்துகளை எழுதுவேன்

ய் ர் ல் ______ ______ ______.

16. குறில் எழுத்துகளை எடுத்து எழுதுவேன்

| தெரு | பெட்டி | வெண்ணெய் | மெழுகு | சுண்டெலி |
|---|---|---|---|---|

1. ______ ______. 2. ______ ______. 3. ______ ______.

4. ______ ______ ______. 5. ______ ______ ______.

14. சவரிசை எழுத்தை எடுத்து எழுதுவேன்

| சக்கரம் | சாக்கு | சேவல் | சுடு | செவி |
|---|---|---|---|---|

1. ________________. 2. ________________. 3. ________________.

4. ________________. 5. ________________.

18. அகரவரிசையில் எழுதுவேன்

இலை, உப்பு, அணில், ஊதல், ஆடு, ஈசல், ஓணான்,

எறும்பு, ஔவை, ஒட்டகம், ஏற்றம், ஐவர்.

______________________________________________

______________________________________________

19. கீழ்க்காணும் உறவுப்பெயர்களைப் படித்துக் காட்டுவேன்

தாத்தா, அம்மா, சித்தப்பா, அத்தை, அண்ணன்

20. எதிர்ச்சொல்லை நிரப்புவேன்

தாத்தா x ____________

அப்பா x ____________

அண்ணன் x ____________

சித்தப்பா x ____________

அத்தை x ____________

# வணக்கம்

பாடம் 9



## 9.1 பேசுவோம்




### சொற்கள்

எலி பூனை வா போ இழு தா பிடி ஏறு

வாழைப்பழம் சிங்கம் முயல் பானை குரங்கு

## 9.2 அறிவோம்

### ஓரெழுத்துச் சொல்

தமிழில் ஓரெழுத்து, பொருள் உணர்த்தும் சொல்லாகவும் வரும். அவற்றுள் சில எழுத்துகளை அறிந்து கொள்வோம்.



கை



ஈ



பூ



தீ




மை



பை

## 9.3 திரும்பப் படிப்போம்

கை ஈ பூ மை பை தீ

### புதிய சொற்கள்

நீ நா மா வை

## 9.4 சொல்லிப் பழகுவோம்



பூ மணக்கும்



ஈ பறக்கும்



கை கொடுப்போம்



தீ சுடும்

## 9.5 பயிற்சி

**பொருத்துவோம்**

தீ　　மை　　ஈ　　பை　　பூ













## 9.6 அறிவோம்

### ஈரெழுத்துச் சொல்

| | | | |
|---|---|---|---|
| ஆ | மை | = | ஆமை |
| பு | றா | = | புறா |
| நி | லா | = | நிலா |
| வீ | ணை | = | வீணை |
| ப | சு | = | பசு |
| கி | ளி | = | கிளி |
| ஆ | டு | = | ஆடு |
| இ | லை | = | இலை |
| ம | லை | = | மலை |
| மீ | ன் | = | மீன் |

## 9.7 திரும்பப் படிப்போம்

### ஈரெழுத்துச் சொல்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆமை | புறா | நிலா | வீணை | பசு |
| கிளி | ஆடு | இலை | மலை | மீன் |

### புதிய சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காடு | இடி | காது | ஓடை | பொன் | பனி |
| தேன் | பால் | வாள் | வால் | யாழ் | மணி |

## 9.8 சொல்லிப் பழகுவோம்



குடை பிடிக்கிறான்



மீன் நீந்துகிறது



கதை எழுதுகிறான்



சிலை செய்கிறார்

## 9.9 பயிற்சி

### (அ) சொல் உருவாக்குவோம்

1. கா
2. வீ
3. தோ
4. ஆ

டு

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________

### (ஆ)

1. கா
2. பா
3. வா
4. வி

ல்

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________

(இ)




1. ____________________

2. ____________________

3. ____________________

4. ____________________

(ஈ)




1. ____________________

2. ____________________

3. ____________________

4. ____________________

## 9.10 பாடி மகிழ்வோம்

### அதோ பாராய்!

குதித்துக் குதித்தே ஓடும்
குதிரை அதோ, பாராய்!
அசைந்து அசைந்து செல்லும்
ஆனை இதோ, பாராய்!
பறந்து பறந்து போகும்
பருந்து அதோ, பாராய்!
நகர்ந்து நகர்ந்து செல்லும்
நத்தை இதோ, பாராய்!
தத்தித் தத்திப் போகும்
தவளை அதோ, பாராய்!
துள்ளித் துள்ளி நாமும்
பள்ளி செல்வோம், வாராய்!

\- அழ. வள்ளியப்பா



## 9.11 பேசுவோம்





### சொற்கள்

ஆமை - ஆமைகள்

முயல் - முயல்கள்

நாய்- நாய்கள்

குதிரை- குதிரைகள்

யானை- யானைகள்

## 9.12 அறிவோம்

**ஒருமை – பன்மை**
Singular Plural


மான்


மான்கள்


குடை


குடைகள்


பந்து


பந்துகள்


வீடு


வீடுகள்


அணில்


அணில்கள்

## 9.13 திரும்பப் படிப்போம்

| ஒருமை | பன்மை |
| --- | --- |
| மான் | மான்கள் |
| குடை | குடைகள் |
| பந்து | பந்துகள் |
| வீடு | வீடுகள் |
| அணில் | அணில்கள் |

### புதிய சொற்கள்

| | |
| --- | --- |
| மீன் | மீன்கள் |
| பை | பைகள் |
| பெட்டி | பெட்டிகள் |

## 9.14 சொல்லிப் பழகுவோம்



குரங்கு



குரங்குகள்



குயில்



குயில்கள்



மாணவர்



மாணவர்கள்

## 9.15 பயிற்சிகள்

### (அ) பொருத்துவோம்



ஆமை



மணிகள்



கோழி



ஆமைகள்



பெண்



ஆண்கள்



ஆண்



பெண்கள்



மணி



கோழிகள்

## (ஆ) சொல் உருவாக்குவோம்

| | | |
|---|---|---|
| கண் | கள் | |
| கதை | | |
| ஆடை | | |
| காடு | | |
| ஏணி | | |

## (இ) விரும்பிச் செய்வேன்

வேறுபாட்டைக் கண்டுபிடிப்பேன்; வட்டமிடுவேன்



## 9.16 கேட்டல் கருத்தறிதல்

### ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்

கவி : மாமா, ஆட்டம் பாட்டம் கொண்டாட்டமாய் இருக்கு. என்ன நடக்குது?

மாமா : அதுவா, கவி! நம்ம ஊர்ல நாட்டுப்புறக் கலை விழா நடக்குது.

கவி : ஓ அப்படியா ! வாங்க மாமா பாப்போம்.

மாமா : ம்ம்.... போகலாமே!.

கவி : அதோ பாருங்க, மாமா. கையில துணி வச்சு ஆடுறாங்களே அது என்ன ஆட்டம்?

மாமா : அதுதான் கவி ஒயிலாட்டம்.

கவி : ஓ... அழகா இருக்குல்ல. சரி, மாமா. அங்கே பாருங்க. மயில் போல வேஷம் போட்டு ஆடுறாங்க.

மாமா : அது மயிலாட்டம், கவி.

கவி : ரொம்ப அழகாக இருக்குல்ல.

மாமா : ஆமா. அதோ அங்க பாரு! அந்தப் பறை இசைக்கு எவ்ளோ ஆர்வமா ஆடுறாங்க.

கவி : அத கேட்கும்போது எனக்கும் ஆடத் தோணுது, மாமா.

மாமா : ஆமாம் கவி! எனக்கும் அப்படியேதான் இருக்கு!

பாடம் 10

# வணக்கம்



## 10.1 பேசுவோம்





## 10.2 அறிவோம்

ஒன்று – 1 

இரண்டு – 2 

மூன்று – 3 

நான்கு – 4 

ஐந்து – 5 

ஆறு – 6 

ஏழு – 7 

எட்டு – 8 

ஒன்பது – 9 

பத்து – 10 

## 10.3 திரும்பப் படிப்போம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | இரண்டு | மூன்று | நான்கு | ஐந்து |
| ஆறு | ஏழு | எட்டு | ஒன்பது | பத்து |

## 10.4 சொல்லிப் பழகுவோம்



பத்து விரல்



மூன்று பழம்



ஏழு நிறம்



நான்கு குடம்

## 10.5 பாடி மகிழ்வோம்

### ஒன்று... இரண்டு... மூன்று...



ஒன்று யாவர்க்கும் தலை ஒன்று



இரண்டு முகத்தில் கண் இரண்டு



மூன்று முக்காலிக்குக் கால் மூன்று



நான்கு நாற்காலிக்குக் கால் நான்கு



ஐந்து ஒருகை விரல் ஐந்து



ஆறு ஈக்குக் கால் ஆறு




ஏழு வாரத்தின் நாள் ஏழு



எட்டு சிலந்தியின் கால் எட்டு



ஒன்பது தானிய வகை ஒன்பது



பத்து இருகை விரல் பத்து

## 10.6 பயிற்சிகள்

### (அ) சொல் உருவாக்குவோம்

1. று ன் ஒ ____________________
2. டு இ ண் ர ____________________
3. ன் மூ று ____________________
4. நா கு ன் ____________________
5. ந் து ஐ ____________________
6. று ஆ ____________________
7. ழு ஏ ____________________
8. ட் எ டு ____________________
9. ன் து ஒ ப ____________________
10. து ப த் ____________________

### (ஆ) பொருத்துவோம்



○ ○ ஐந்து



○ ○ நான்கு



○ ○ இரண்டு



○ ○ மூன்று

## 10.7 பேசுவோம்



## 10.8 அறிவோம்



வட்டம்



சதுரம்



செவ்வகம்



முக்கோணம்

## 10.9 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| வட்டம் | சதுரம் |
| செவ்வகம் | முக்கோணம் |

## 10.10 சொல்லிப் பழகுவோம்



வட்ட நிலா




சதுரக் கடிகாரம்



செவ்வகப் பலகை



முக்கோணக் கூரை

## 10.11 பயிற்சிகள்

### (அ) பொருத்துவோம்

















## (ஆ) நிரப்புவோம்



வட் ______ ம்

| | |
|---|---|
| டு | ட |



முக் ______ ணம்

| | |
|---|---|
| கோ | கே |



ச ______ ரம்

| | |
|---|---|
| து | த |



செ ______ வகம்

| | |
|---|---|
| வி | வ் |

## (இ) விரும்பிச் செய்வோம்

முக்கோணத்திற்கு ◯ இடுவேன்; வட்டத்திற்கு □ போடுவேன்



## 10.12 கேட்டல் கருத்தறிதல்

**சிங்கமும் மானும்**



**சிங்கத்துக்குக் காலில் அடிபட்டது. அதனால் நடக்க முடியவில்லை. அந்த வழியாக ஒரு மான்குட்டி வந்தது. அது சிங்கத்தைப் பார்த்து வருந்தியது. இதனைச் சிங்கம் கவனித்தது. அது மான்குட்டியை அருகே அழைத்தது. "நண்பா!, நீ வீரன். தீய எண்ணம் இல்லாதவன். இந்த வழியாகப் பல விலங்குகள் சென்றன. அவை என்னைப் பார்த்துக் கேலியாகப் பேசின. என் காயத்தைப் பார்த்துச் சிரித்தன" என்று கூறியது. சிங்கத்தின் கவலையைப் புரிந்துகொண்ட மான், "அட! விடுங்கள் இப்போது ஓய்வு எடுங்கள். கால் குணம் ஆகட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று ஆறுதல் கூறியது.**

பாடம் 11

# வணக்கம்



## 11.1 பேசுவோம்



## 11.2 அறிவோம்

மூவிடப் பெயர் (I, II & III Person)



நான் படிக்கிறேன்



நாம் படிக்கிறோம்



நீ ஓடுகிறாய்



நீங்கள் ஓடுகிறீர்கள்



அவள் ஆடுகிறாள்



அவர்கள் ஆடுகிறார்கள்



காகம் பறந்து வந்தது.
அது மரக்கிளையில் அமர்ந்தது.



மான்கள் குளத்தின் அருகே வந்தன. அவை நீர் குடித்தன.

# மூவிடப் பெயர்

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
| --- | --- | --- |
| தன்னைக் குறிப்பது | தனக்கு முன்னே இருப்பவரைக் குறிப்பது | தன்னையும், முன்னால் இருப்பவரையும் குறிக்காமல் மூன்றாவதாக இருப்பவரைக் குறிப்பது |
| நான், நாங்கள், நாம் | நீ, நீங்கள் | அவன், அவள், அவர், அது, அவை |

## 11.3 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| நான் | நாம் |
| நீ | நீங்கள் |
| அவள் / அவன் | அவர்கள் |
| அது | அவை |

## 11.4 சொல்லிப் பழகுவோம்



நான் பாடுகிறேன்



நீங்கள் விளையாடுகிறீர்கள்



அவன் எழுதுகிறான்



அது மரம்

## 11.5 பாடி மகிழ்வோம்

### ஓடி விளையாடு பாப்பா

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா

-பாரதியார்



## 11.6 பயிற்சிகள்

(அ) பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுவோம்

(நான், அவன், அவர்கள், நாம், நீ)



__________ ஓடினான்



__________ ஆடுகிறார்கள்



__________ படிக்கிறேன்



__________ எழுதுகிறாய்



__________ பேசுவோம்

(ஆ) உரிய சொல்லை நிரப்புவோம்

1. ________________ படிக்கிறேன். [நான் / நாம்]

2. ________________ வரைகிறாய். [நீ / நீங்கள்]

3. கண்ணன் மரம் ஏறினான். ________________ பழம் பறித்தான்.

[அவன் /அவள்]

4. வள்ளி ஓடினாள். ________________ வெற்றி பெற்றாள்.

[அவன் /அவள்]

5. தலைவர்கள் வந்தார்கள். ________________ பேசினார்கள்.

[அவர்கள் / அவர்]

6. யானை வந்தது. ________________ நீர் குடித்தது. [அது /அவை]

(இ) பொருத்துவோம்



நீ நன்றாக ஆடுகிறாய்.



அவன் எழுதினான்



அவை சிங்கங்கள்



அவர்கள் பேசினார்கள்

(ஈ) பொருத்தமான சொல்லை நிரப்புவோம்

என் பெயர் நீலா. ______________ (நான்/ நீ) மாலாவுடன் கடைக்குச் சென்றேன். அங்கு நிறைய பொம்மைகள் இருந்தன. ______________ (அவர்கள்/அவை) அழகாக இருந்தன. ______________ (நீங்கள்/ நாங்கள்) பொம்மைகளை வாங்க விரும்பினோம். மாலா, மயில் பொம்மையை வாங்கினாள். ______________ (அது/ அவை) அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. "______________ (நீ/ அவள்) எதுவும் வாங்கவில்லையா?" என்று மாலா என்னிடம் கேட்டாள். ______________ (உனக்கு/ எனக்கு) யானைப் பொம்மை வேண்டும் என்று கூறினேன். "______________ (நாங்கள்/ நீங்கள்) வேறு ஏதாவது பார்க்கிறீர்களா?" என்று கடைக்காரர் கேட்டார்.

(உ) விரும்பிச் செய்வேன்

யார் கையில் எந்த நிறம்? கண்டுபிடிப்பேன்; வண்ணமிடுவேன்



## 11.7 கேட்டல் கருத்தறிதல்

**வணிக வளாகம்**



| | | |
|---|---|---|
| அண்ணன் | : | உங்களுக்கு என்ன வேணும்? |
| தம்பி | : | எனக்குக் கைக்கடிகாரம் வேணும். |
| தங்கை | : | அண்ணா! எனக்குப் பட்டுப்பாவாடை வேணும். |
| அண்ணன் | : | சரி, வாங்கலாம். |
| தங்கை | : | அங்க என்ன விளையாடுறாங்க? |
| அண்ணன் | : | அது பௌலிங் அலே (Bowling Alley) |
| தங்கை | : | அண்ணா, நாம போய் விளையாடலாமா? |
| அண்ணன் | : | விளையாடலாமே. |
| தம்பி | : | அண்ணா, எனக்கு இந்த விளையாட்டு விளையாடத் தெரியாதே! |
| அண்ணன் | : | அப்படியா, சரி. நாம படம் பார்க்கலாமா? |
| தம்பி | : | ஆமாம் அண்ணா, நானும் அதைத்தான் நினைச்சேன். |
| அண்ணன் | : | ஓ! மகிழ்ச்சி படமே பார்க்கலாம் வாங்க. |

# வணக்கம்

பாடம்
12



## 12.1 பேசுவோம்



### சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆறு | பாலம் | கரை | வாழைப்பழம் | |
| கறை | பள்ளம் | நாணயம் | வானம் | நீலம் |

## 12.2 அறிவோம்



பாலம்



பள்ளம்



வாழைப்பழம்



ஆலமரம்



இறகு



நத்தை



வானம்




நாணயம்



கரை



கறை



வலை



வளையல்




ஆனி மாதம்



ஆணி



மலை



மழை



வால்



வாள்

## 12.3 திரும்பப் படிப்போம்

| | | | |
|---|---|---|---|
| பாலம் | பள்ளம் | வாழைப்பழம் | நத்தை |
| வானம் | நாணயம் | கரை | கறை |
| வலை | வளை | ஆனி | ஆணி |
| மலை | மழை | வால் | வாள் |

### புதிய சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| புலி | புளி | கோலி | கோழி |
| அரம் | அறம் | ஊன் | ஊண் |
| தொழிலாளர் | | | |

## 12.4 சொல்லிப் பழகுவோம்

ஒன்றில் பாதி அரை

1/2

வீட்டின் ஒரு பகுதி அறை



மேகம் பொழிவது மழை



உயர்ந்து நிற்பது மலை



தமிழ் மாதங்களில் ஒன்று ஆனி




சுவரில் அடிப்பது ஆணி



## 12.5 பாடி மகிழ்வோம்



### குரங்கும் விழுதும்

கிளையினில் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்
கிளைதோறும் குதித்துத் தாவி
கீழுள்ள விழுதை யெல்லாம்,
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்

- பாரதிதாசன்

## 12.6 பயிற்சிகள்

(அ) பொருத்துவோம்

| | | |
|---|---|---|
| ல் | நண்டு |  |
| ள் | மன்னன் |  |
| ழ் | கால் |  |
| ர் | வாள் |  |
| ற் | யாழ் |  |
| ந் | இளநீர் |  |
| ன் | புற்று |  |
| ண் | பந்து |  |

(ஆ) படத்திற்குரிய சொல்லை எழுதுவோம்.



________________

வாள் /வால்



________________

மலை / மழை



________________

வலை / வளை



________________

புலி /புளி

(இ) விடுகதைகள்

(வெல்லம், மழை, வாழை, தண்ணீர்)

1. கிளை இல்லை; குலை உண்டு; நான் யார்?
2. வானில் இருந்து வருவேன்;
   வனத்திற்கு வளம் தருவேன் நான் யார்?
3. கட்டியாய் இருப்பேன்; கடித்தால் இனிப்பேன் நான் யார்?
4. ஆறாய் ஓடி வருவேன்;
   அணையில் கடந்து செல்வேன்; நான் யார்?

(ஈ) நிரப்புவோம்



மீனவன் ________________ வீசினான்.

(வலை/ வளை)



புலி________________ தேடும்.

(இரை / இறை)



மாதவன் _______________ செய்கிறான்.

(பனி/ பணி)



பசு _______________ தரும்.

(பால் / பாழ்)

(உ) பொருத்தமான சொல்லை எழுதுவோம்

1. ஆடு _____________________ தின்னும்.



தழை



தலை

2. ஆற்றின் ஓரம் ____________________



கறை



கரை

3. கடலின் நிறம் _____________________



நீலம்



நீளம்

4. பொங்கலில் இடுவது _______________



வெள்ளம்



வெல்லம்

## 12.7 கேட்டல் கருத்தறிதல்

**பகிர்ந்து உண்போம்**



அம்மா சமைத்துக் கொண்டு இருந்தார். அங்கு வந்த சுமதி, “அம்மா, என்ன சமைக்கிறீங்க?“ என்று கேட்டாள். “வா, சுமதி, கொழுக்கட்டை செய்கிறேன். உனக்குத்தான் ரொம்பப் பிடிக்குமே“ என்றார். உடனே சுமதி, “அம்மா, என் தோழி இளமதிக்கும் கொழுக்கட்டை மிகவும் பிடிக்கும். அவளையும் கூட்டிட்டு வரட்டுமா?“ என்று கேட்டாள். அம்மாவும் சரி என்றார். சமையலுக்கு உதவிக்கொண்டிருந்த அப்பா, “சுமதி, மாம்பழமும் இருக்கு”, என்றார். “சரிப்பா, இளமதியையும் கூட்டிட்டு வந்துடுறேன். நாங்க சேர்ந்தே சாப்பிடுறோம்” என்று கூறினாள். தன் தோழியை அழைக்க ஓடினாள்.

# வணக்கம்

பாடம்
13



## 13.1 பேசுவோம்



### சொற்கள்

| | | |
|---|---|---|
| பள்ளி | வகுப்பறை | விளையாட்டு மைதானம் |
| நடக்கிறார் | மெதுவாக | பெரிய |
| நிற்கிறார் | ஓரமாக | அழகிய |

## 13.2 அறிவோம்

**பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல் (Noun)**



**புத்தகம்**




**பள்ளி**



**நாற்காலி**



**கறுப்பு**



**மான்**



**நாய்**

## 13.3 திரும்பப் படிப்போம்

| | | |
|---|---|---|
| புத்தகம் | பள்ளி | நாற்காலி |
| கறுப்பு | மான் | நாய் |

**புதிய சொற்கள்**

| | | |
|---|---|---|
| சித்திரை | குளிர்காலம் | ஆப்பிரிக்கா |
| மூக்கு | வாஷிங்டன் | தமிழ்நாடு |

## 13.4 சொல்லிப் பழகுவோம்



தை மாதம் பொங்கல் விழா



நாற்காலிக்கு நான்கு கால்



அமுதனும் இனியனும் நண்பர்கள்



மயிலுக்குத் தோகை அழகு



நாய் வீட்டு விலங்கு



காகம் கறுப்பு நிறம்

## 13.5 பயிற்சி

### பொருத்துவோம்

| பெயர்கள் | படங்கள் |
| --- | --- |
| பூனை |  |
| கடிகாரம் |  |
| விசிறி |  |
| வளையல்கள் |  |
| கதவு |  |
| பழங்கள் |  |
| பொம்மைகள் |  |

## 13.6 அறிவோம்

**செயலைக் குறிப்பது வினைச்சொல் (Verb)**



பாடு



நட



படி



ஆடு



ஓடு



நீந்து

## 13.7 திரும்பப் படிப்போம்

| | | |
|---|---|---|
| பாடு<br>ஆடு | நட<br>ஓடு | படி<br>நீந்து |

### புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| பார் | பேசு | எழுது |
| கேள் | வரை | உண் |

## 13.8 சொல்லிப் பழகுவோம்



அப்பா சாப்பிடுகிறார்



தம்பி எழுதுகிறான்



நீ பாடுகிறாய்



பள்ளி செல்கிறாள்



செய்தித்தாள் படிக்கிறார்



நீ ஓடுகிறாய்

## 13.9 பாடி மகிழ்வோம்

### சின்னஞ்சிறு கிளியே!

சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலி தீர்த்தே - உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்

பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா
பேசும் பொற்சித்திரமே
அள்ளி அணைத்திடவே -என் முன்னே
ஆடி வரும் தேனே

- பாரதியார்



## 13.10 பயிற்சி

(அ) சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுவோம்

(ஓடுகிறாள், சிரிக்கிறது, ஆடுகிறாள், எழுதுகிறாள், பாடுகிறார்)



குழந்தை ____________________



பாடல் ____________________



பிரியா ____________________



பூஜா ____________________



காவியா ____________________

## 13.11 அறிவோம்

| பெயரின் தன்மையை விவரிப்பது, பெயரடை. (Adjective) | | வினையின் தன்மையை விவரிப்பது, வினையடை. (Adverb) |
|---|---|---|
| அழகான குழந்தை |  | அழகாகச் சிரித்தது |
| பெரிய விமானம் |  | தாழ்வாகப் பறந்தது |
| சிறிய ஆமை |  | மெதுவாகச் சென்றது |
| இனிப்பான மாம்பழம் |  | சுவையாக இருந்தது |

## 13.12 திரும்பப் படிப்போம்

- அழகான குழந்தை
- பெரிய விமானம்
- சிறிய ஆமை
- இனிப்பான மாம்பழம்

- குழந்தை அழகாகச் சிரித்தது
- விமானம் தாழ்வாகப் பறந்தது
- ஆமை மெதுவாகச் சென்றது
- மாம்பழம் சுவையாக இருந்தது

### புதிய சொற்கள்

சிறந்த ஆசிரியர்
உயரமான மலை
இனிமையாகப் பாடினாள்

மெல்ல நடந்தாள்
நீளமான ஆறு
விரைவாக ஓடினான்

## 13.13 சொல்லிப் பழகுவோம்



அழகிய வீடு



உயரமான மலை



மெதுவாக ஊர்ந்தது



அழகாக வரைகிறான்

## 13.14 பயிற்சி

### சொல்லை இணைத்து எழுதுவோம்




1. அழகான ____________________

2. அழகான ____________________

1. ____________________ வந்தான்.

2. ____________________ வந்தான்.

## 13.15 கேட்டல் கருத்தறிதல்

### என் விருப்பம்

ஆசிரியர் : இனியா, நீ எங்க வசிக்கிற?

மாணவர் : ப்ரீமாண்ட்ல.

ஆசிரியர் : ஓ.... ப்ரீமாண்ட்ல நிறைய கடைகள் இருக்கும்தானே? சரி. நீ விடுமுறை நாள்ல எங்க போவ?

மாணவர் : பூங்கா, கடற்கரை, கடைகளுக்குப் போவோம்.

ஆசிரியர் : அப்படியா? சரி. என்ன வாங்குவீங்க?

மாணவர் : அம்மா நிறைய வாங்குவாங்க. நான் பழங்கள், பொம்மை, தின்பண்டம், நூடுல்ஸ் எல்லாம் கேட்பேன்.

ஆசிரியர் : அப்படியா? நிறைய பொம்மை இருக்குமே?

மாணவர் : ஆமாம். எல்லா பொம்மையும் வச்சு நல்லா விளையாடுவேன்.

ஆசிரியர் : உனக்கு விளையாடுவது பிடிக்குமா?

மாணவர் : ஆமா. எனக்கு விளையாட ரொம்பப் பிடிக்கும்.

ஆசிரியர் : ஏன் அப்படி?

மாணவர் : நண்பர்களோடு சேர்ந்தா நிறைய புதுப்புது விளையாட்டு விளையாடலாம் இல்லையா! அதான் எனக்கு விளையாடப் பிடிக்கும்.

# வணக்கம்

பாடம் 14



## 14.1 பேசுவோம்



**சொற்கள்**

| | | |
|---|---|---|
| பூவை எடு | செடிக்கு நீர் ஊற்று | தங்கைக்குப் பூ கொடு |
| பூவைப் பறி | பூவைக் கையால் எடு | |

## 14.2 அறிவோம்



வீட்டைக் கட்டுகிறார்



பொருளை வாங்குகிறாள்



காலால் உதைக்கிறாள்



எழுதுகோலால் எழுதினான்



மாணவருக்குப் பரிசளித்தார்



பாட்டுக்குத் தாளமிட்டான்

## 14.3 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| வீட்டைக் கட்டுகிறார் | பொருளை வாங்குகிறாள் |
| காலால் உதைக்கிறாள் | எழுதுகோலால் எழுதினான் |
| மாணவருக்குப் பரிசளித்தார் | பாட்டுக்குத் தாளமிட்டான் |

## 14.4 சொல்லிப் பழகுவோம்



குழந்தையைத் தூக்கினார்



வீணையை வாசித்தார்



கைகளால் வணங்கினர்



போர்வையால் போர்த்தினான்



செடிக்கு நீர் ஊற்றினாள்



பூங்காவிற்குச் சென்றனர்

## 14.5 பாடி மகிழ்வோம்

### உடலின் உறுதி

உடலின் உறுதி உடையவரே
    உலகில் இன்பம் உடையவராம்
இடமும் பொருளும் நோயாளிக்கு
    இனிய வாழ்வு தந்திடுமோ ?
தூய காற்றும் நன்னீரும்
    சுண்டப் பசித்தபின் உணவும்
நோயை ஓட்டி விடுமப்பா
    நூறு வயது தருமப்பா

- கவிமணி தேசிக விநாயகனார்



## 14.6 பயிற்சிகள்

(அ) உரிய சொல்லை நிரப்புவோம்




ஆசிரியர் _______________ அழைத்தார்.

(மாணவரை / மாணவரால்)



அரசர் _______________ பரிசளித்தார்.

(வீரனுக்குப் / வீரனைப்)



பூனையைக் _______________ தூக்கினான்.

(கைக்குத் / கையால்)



எழிலரசி _______________ கண்டாள்.

(வானவில்லைக் / வானவில்லால்)



பச்சைக் _______________ பழம் கொடுத்தான்.

(கிளியைப்/ கிளிக்குப்)



நான் _______________ உயர்வு பெற்றேன்.

(படித்ததை / படித்ததால்)

ஆ) சொல்லை நிரப்புவோம்

(எ.கா.) பூனை பால் குடித்தது. (ஐ)

பூனை பாலைக் குடித்தது.

(துணியை/ வீணையை/ புலியைக்/ பழத்தைக் / பாடலைப்)

1. மாறன் பாடல் (ஐ) ——————- பாடினான்.

2. அணில் பழம் (ஐ) ——————- கடித்தது.

3. ஆதினி வீணை (ஐ) —————— வாசித்தாள்.

4. வேடன் புலி (ஐ) —————— கொன்றான்.

5. அப்பா துணி (ஐ) —————— மடித்தார்.

(இ) சரியான தொடருக்கு ( ✔ ) குறியிடுக

1. பூனை எலியைப் பிடித்தது. ☐

பூனை எலிக்குப் பிடித்தது. ☐

2. செல்வி கடற்கரைக்குச் சென்றாள். ☐

செல்வி கடற்கரையைச் சென்றாள். ☐

3. வீட்டுக்கு வெள்ளை அடித்தான். ☐

வீட்டை வெள்ளை அடித்தான். ☐

4. கையால் மணல் வீட்டைக் கட்டினான். ☐

கைக்கு மணல் வீட்டைக் கட்டினான். ☐

5. சிறுவன் வீட்டிற்குச் சென்றான். ☐

சிறுவன் வீட்டைச் சென்றான். ☐

(ஈ) நிரப்புவோம்

(செடிக்கு, நாட்டை, புல்லை, வீட்டுக்குச், மண்ணால்,)

1. அரசர்கள் ____________________ ஆண்டனர்.

2. வள்ளி ____________________ நீர் ஊற்றினாள்.

3. சிறுவர்கள் ____________________ வீடு கட்டினார்கள்.

4. மான் ____________________ மேய்ந்தது.

5. நான் ____________________ சென்றேன்.

(உ) பொருத்துவோம்

| | | | |
|---|---|---|---|
|  | செடிக்கு | ○ | ○ உடைத்தான். |
|  | வயலுக்குச் | ○ | ○ உணவு அளித்தான். |
|  | சுவருக்கு | ○ | ○ நீர் ஊற்றினாள். |
|  | பானையை | ○ | ○ சென்றான். |
|  | யானைக்கு | ○ | ○ வெள்ளையடித்தார். |

## 14.7 கேட்டல் கருத்தறிதல்

### நலமாய் வாழ்வோம்



"தாத்தா, எதுக்குத் தினமும் நடைப்பயிற்சி போறீங்க?" என்று கேட்டாள் கயல்." நடைப்பயிற்சி செஞ்சா, நம்ம உடலும் மனசும் ரொம்ப நல்லா இருக்கும். அது மட்டுமா? அன்று முழுவதும் புத்துணர்ச்சியா இருக்கும் கயல்" என்றார் தாத்தா. "ஓ! அப்படியா தாத்தா? அதான் நீங்க நாள் முழுதும் சுறுசுறுப்பாவே இருக்கிங்களா? அது சரி தாத்தா, நடைப்பயிற்சிய வீட்டிலேயே செய்யக்கூடாதா?" என்றாள் கயல். "தாராளமா செய்யலாம். சில பேரு வீட்டிலேயும் சில பேரு மொட்டை மாடியிலேயும் செய்றாங்க. வேறு சிலர் கடற்கரையிலே கூடச் செய்றாங்க" என்றார் தாத்தா. "ஆனா தாத்தா, என்னைப் போலச் சின்னப் பொண்ணுங்க நடைப்பயிற்சி செய்யலாமா?" என்று கயல் கேட்டாள். அதைக் கேட்டுச் சிரித்தார் தாத்தா. "கயல், நானும் உன்ன போலச் சின்ன வயசுல இருந்தப்பவே நடைப்பயிற்சி செய்யத் தொடங்கிட்டேன். இதுவரைக்கும் எந்த நோயும் வந்ததில்ல. அதனால நீயும் நடைப்பயிற்சி செய்யலாம்" என்றார் தாத்தா. "அப்படீன்னா, நாளையில் இருந்து நானும் உங்க கூட வர்றேன் தாத்தா. என்னையும் கூட்டிட்டுப் போங்க" என்று துள்ளிக் குதித்தாள் கயல்.

# வணக்கம்

பாடம் 15



## 15.1 மீள்பார்வை

## பயிற்சிகள்

1. படங்களின் பெயர்களைக் கூறுவேன்








2. குறில் சொற்களைப் படித்துக் காட்டுவேன்

கடல் ஆறு நெல் வேர்

3. வேறுபட்ட சொல்லைப் படித்துக் காட்டுவேன்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. அலை | கலை | வரை | சிலை | இலை |
| 2. எட்டு | பாட்டு | வட்டு | தட்டு | கட்டு |
| 3. கடல் | மடல் | ஆடல் | உடல் | விடல் |
| 4. மரம் | வரம் | உரம் | அறம் | சரம் |
| 5. பாவை | சுவை | தேவை | பூவை | கோவை |

4. நெடில் எழுத்துகள் உள்ள சொற்களைப் படித்துக் காட்டுவேன்

அருவி ஆலமரம் நெல்
யாழ் தவளை முயல்

5. பொருத்தமான சொல்லை நிரப்பிப் படித்துக் காட்டுவேன்

பாடு செய் உண் நடு வரை

1. செடி ______________.
2. படம் ______________.
3. வேலை ______________.
4. உணவு ______________.
5. பாடல் ______________.

6. படத்திற்குரிய சொல்லைப் படித்துக் காட்டுவேன்



குடை / கூடை




பால் / பல்



பலம் / பாலம்



நகம் / நாகம்



பேட்டி / பெட்டி



குடம் / கூடம்

7. படத்தின் பெயரிலுள்ள எழுத்தோடு பொருத்துவேன்



ல்



ஞ்



ம்



ன்



க்

8. பின்வரும் படத்தைப் பார்த்து ஐந்து தொடர் பேசுவேன்



9. படத்திற்குரிய முதல் எழுத்தை வட்டமிடுவேன்



அ ஆ இ ஈ



அ ஆ இ ஈ



அ ஆ இ ஈ



அ ஆ இ ஈ

10. விடுபட்ட எழுத்துகளைக் கட்டத்தில் நிரப்புவேன்



| | | | |
|---|---|---|---|
| ப | | | ம் |



| | | |
|---|---|---|
| கு | தி | |



| | | | |
|---|---|---|---|
| செ | | | ழை |



| | | | | |
|---|---|---|---|---|
| ஒ | | | க | |



| | | |
|---|---|---|
| சோ | ள | |

## 11. நிரப்புவேன்

எழுத்து

உயிரெழுத்துகள்

குறில்

___, ___, ___, ___, ___

நெடில்

___, ___, ___, ___,

___, ___, ___

மெய்யெழுத்துகள்

வல்லினம்

___, ___, ___, ___, ___, ___

மெல்லினம்

___, ___, ___, ___, ___, ___

இடையினம்

___, ___, ___, ___, ___, ___

## 12. புதிய சொற்கள் உருவாக்குவேன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | ம | யா | பா | ணி | பூ |
| வா | தா | ய் | னை | ம் | ண் |

1. ________________. 2. ________________. 3. ________________.

4. ________________. 5. ________________.

13. பன்மைச் சொல்லை எழுதுவேன்

1. மான் - மான்கள்
2. ஆடு - ________________
3. யானை - ________________
4. வீடு - ________________
5. குருவி - ________________

14. முதல் எழுத்தை மாற்றி நெடிலாக்குவேன்

1. குடை - கூடை
2. வரம் - ________________
3. பல் - ________________
4. நகம் - ________________
5. பட்டு - ________________

15. எழுத்துகளை இணைத்து எழுதுவேன்




1. ________________.
2. ________________.
3. ________________.
4. ________________.

16. சொற்களை இணைத்து எழுதுவேன்

அந்தப்

| | | |
|---|---|---|
| பக்கம் | 1. ____________________. |
| பட்டம் | 2. ____________________. |
| பழம் | 3. ____________________. |
| பாடல் | 4. ____________________. |

17. பின்வரும் எழுத்துகளில் தொடங்கும் சொற்கள் இரண்டு எழுதுவேன்

அ
1. ____________________.
2. ____________________.

ம
1. ____________________.
2. ____________________.

த
1. ____________________.
2. ____________________.

வ
1. ____________________.
2. ____________________.

ப
1. ____________________.
2. ____________________.

18. விடை எழுதுவேன்



முட்டையிடும் பறவை எது?

கோழி
______________________________.



நன்றியுள்ள விலங்கு எது?

______________________________.



பால் தரும் விலங்கு எது?

______________________________.



பேசும் பறவை எது?

______________________________.



மரம்விட்டு மரம் தாவும் விலங்கு எது?

______________________________.

19. வடிவங்களின் பெயரை எழுதுவேன்



1. ______________



2. ______________



3. ______________



4. ______________

20. நிரப்புவேன்

1. ______________ வீட்டிற்குச் சென்றேன்.
2. ______________ பரிசு பெற்றாய்.
3. ______________ நடனம் ஆடினாள்.
4. ______________ பந்து விளையாடினார்கள்.
5. ______________ போட்டியில் கலந்து கொண்டான்.

அவன் | அவள் | நான் | நீ | அவர்கள்

21. உரிய சொல்லை எழுதுவேன்

1. மலையில் ____________ பெய்தது. (மழை/ மளை)
2. காட்டில் ____________ இருந்தது. (புளி/ புலி)
3. ஆடு ____________ மேய்ந்தது. (புல் / புள்)
4. மல்லிகை ____________ வீசியது. (மனம்/ மணம்)
5. என் மாமா ____________ யில் வீட்டிற்கு வந்தார். (காலை/ காளை)

22. நிரப்புவேன்

1. கவின் ________________ விளையாடினான்.

2. ஆமை ________________ சென்றது.

3. கழுகு ________________ மரக்கிளையில் இருந்தது.

4. கடைத்தெருவில் ________________ பொம்மையைக் கண்டேன்.

5. குதிரை ________________ ஓடியது.

| | | | |
|---|---|---|---|
| அழகான | விரைவாக | மெதுவாக | நன்றாக |
| உயரமான | | | |

23. தொடரை முழுமையாக்குவேன்

1. நான் கடை (கு) சென்றேன்.

கடைக்குச் /கடையில்

__________________________________________________.

2. நான் பள்ளி (கு) சென்றேன்.

பள்ளியில்/ பள்ளிக்குச்

__________________________________________________.

3. அம்மா, குழந்தை (கு) பழம் தந்தார்.

குழந்தையால்/ குழந்தைக்குப்

__________________________________________________.

24. விடை எழுதுவேன்

1. உன்னுடைய Grandmother ஐத் தமிழில் எப்படி அழைப்பாய்?

____________________________

2. உன் அம்மாவின் அண்ணன், வீட்டிற்கு வந்திருக்கிறார். அவரை நீ எப்படி அழைப்பாய்?

____________________________

3. உன் தந்தையின் அண்ணன் உனக்கு என்ன உறவுமுறை ஆவார்?

____________________________

4. உன் அப்பாவின் அப்பாவை நீ எப்படி அழைப்பாய்?

____________________________

5. உங்கள் வீட்டில் உனக்குப் பின் பிறந்த பெண்ணை எப்படி அழைப்பாய்?

____________________________

25. ஓரெழுத்துச் சொல்லைக் கண்டுபிடிப்பேன்



மணக்கும் எழுத்து

______________________



சுடும் எழுத்து

______________________



எழுதும் எழுத்து

______________________



அழைக்கும் எழுத்து

______________________



வாங்கும் எழுத்து

______________________



சுவைக்கும் எழுத்து

______________________



பறக்கும் எழுத்து

______________________

## தமிழ் நெடுங்கணக்கு வரிசை

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

## அடிப்படை மொழித்திறன்கள்

| | |
|---|---|
| பேசுவோம் | - சூழலைப் புரிந்துகொண்டு இயல்பாகப் பேசும் திறன். |
| அறிவோம் | - படங்கள் வாயிலாக எழுத்து, சொல் அறியும் திறன். |
| திரும்பப் படிப்போம் | - கற்றுக்கொண்ட பாடப்பொருளை மீட்டுணரும் திறன். |
| புதிய சொற்கள் | - புதிய சொற்களைப் பொருளுணர்ந்து கையாளும் திறன். |
| சொல்லிப் பழகுவோம் | - அறிந்த சொற்களைக் கொண்டு தொடர் உருவாக்கும் திறன். |
| பாடி மகிழ்வோம் | - எளிய, இனிய பாடல்களைக் கேட்டுணரும் திறன். |
| கேட்டல் கருத்தறிதல் | - நற்பண்புகளை வளர்க்கும் நிகழ்வுகளைக் கேட்டுணரும் திறன். |
| பயிற்சிகள் | - ஆர்வத்தைத் தூண்டும் செயல்பாடுகளைத் தானே செய்யும் திறன். |

| பாடங்கள் | கேட்டல் | பேசுதல் | படித்தல் | எழுதுதல் |
|---|---|---|---|---|
| | எழுத்துகளின் சரியான ஒலிப்பைக் கேட்டறிதல். | எழுத்துகளின் ஒலிப்பை ஒலித்தல். | எழுத்துகளைச் சரியான ஒலிப்புடன் பிழையின்றிப் படித்தல். | வளைவு, சுழி கோடு, புள்ளி ஆகியவற்றின் துணை கொண்டு எழுத்துகளை இனம் கண்டு எழுதுதல். |
| | பாடலை இனிய ஓசை நயத்தோடு கேட்டல். | பாடலை இனிய ஓசை நயத்தோடு கூறுதல். | எழுத்துகளைக் குரல் ஏற்ற இறக்கத்துடன் பிழையின்றிப் படித்தல். | எழுத்துகள், சொற்களைத் தானே எழுதுதல். |
| | சொற்களைப் படத்துடன் ஒப்பிட்டுக் கேட்டல். | சொற்களைச் சரியான ஒலிப்புடன் ஒலித்தல். | குறில் நெடில் வேறுபாடறிந்து படித்தல். | குறில், நெடில் எழுத்துகளை இனம் கண்டு எழுதுதல். |
| | சிறு சிறு தொடர்களைக் கேட்டல். | சிறு சிறு தொடர்களைச் சொல்லுதல். | வல்லினம், மெல்லினம், இடையினம் தொடர்பான சொற்களைப் படித்தல். | பயிற்சிகள் மூலம் சிறு சிறு சொற்களை எழுதுதல். |
| | படங்களுடன் உரையாடலைக் கேட்டல். | சிறு சிறு சொற்களைக் கொண்டு தொடர்களை உருவாக்கித் தானே பேசுதல். | கிரந்த எழுத்துகளை அடையாளம் கண்டு படித்தல். | எழுத்துகளின் பாகுபாடுகளை அறிந்து பயிற்சிகளை மேற்கொள்ளுதல். |
| | கிரந்த எழுத்துகளின் ஒலிப்பைத் தெரிந்து கொள்ளுதல். | படங்களைப் பார்த்துச் சிறு சிறு தொடர்களைப் பேசுதல். | ஈரெழுத்துச் சொற்களைப் படித்துப் பழகுதல். | ஓரெழுத்து, ஈரெழுத்துச் சொற்களை எழுதிப் பழகுதல். |
| | குடும்பத்திலுள்ள உறவுப்பெயர்களைக் கேட்டறிதல். | ஓரெழுத்து, ஈரெழுத்துச் சொற்களைக் கொண்டு சிறு சிறு தொடர்கள் அமைத்துப் பேசுதல். | ஒருமை பன்மைச் சொற்களை உணர்ந்து படித்தல். | படங்கள் வாயிலாக ஒருமை பன்மை வேறுபாடு அறிந்து எழுதிப் பழகுதல். |
| 1-15 பாடங்கள் எளிய இலக்கணப் பயிற்சிகள் | ஓரெழுத்து, ஈரெழுத்துச் சொற்களைக் கொண்ட சிறு சிறு தொடர்களைக் கேட்டல். | படங்களுக்குரிய சொற்களின் சரியான ஒலிப்பைச் சொல்லுதல். | சூழல் சார்ந்த வடிவங்கள் தொடர்பான செய்திகளைப் படித்தறிதல். | வடிவங்களை வரைந்து அவற்றின் பெயர்களை எழுதிப் பழகுதல். |
| | பயன்பாட்டிலுள்ள சொற்களைக் கொண்டு ஒருமை பன்மை பற்றிக் கேட்டறிதல். | பயன்பாட்டிலுள்ள வடிவங்களைப் பற்றியும் பேசுதல். | மூவிடப் பெயர்களின் தொடர் அமைப்புமுறையை இனங்கண்டு படித்தல். . | மூவிடப் பெயர்களைச் சிறு சிறு தொடர்களாக எழுதிப் பழகுதல். |
| | சூழல் சார்ந்த பொருள்களுடன் வடிவங்கள் பற்றிய செய்திகளைக் கேட்டறிதல். | எளிமையான சிறு சிறு தொடர்களை அமைத்து. அவற்றின் மூலம் மூவிடப் பெயர்களின் வேறுபாடு அறிந்து பேசுதல். | காணப்படும் ர/ற, ல/ள/ழ, ந/ண/ன ஒலி வேறுபாடு சொற்களைப் படித்தறிதல். | சொற்களிலுள்ள ர/ற, ல/ள/ழ, ந/ண/ன ஒலி வேறுபாடுள்ள சொற்களை எழுதுதல். |
| | எளிய தொடர்கள் வாயிலாக மூவிடப் பெயர்களைக் கேட்டறிதல்.. | அன்றாடப் பயன்பாட்டுச் சொற்களை ஒலித்து ர/ற, ல/ள/ழ, ந/ண/ன ஒலி வேறுபாடு சொற்களைப் பேசிப் பழகுதல். | சூழல் சார்ந்த சொற்களில் பெயர்ச் சொல், வினைச்சொல், பெயரடை, வினையடை வேறுபாடு அறிந்து படித்தறிதல்., | பெயர்ச்சொல், வினைச்சொல்லை அடிப்படையாகக் கொண்டு பெயரடை, வினையடையை உருவாக்கி எழுதுதல். |
| | ர/ற, ல/ள/ழ, ந/ண/ன ஒலி வேறுபாடு சொற்களைக். கேட்டறிதல். | பயன்பாட்டிலுள்ள தொடர்களில் பெயர்ச்சொல், வினைச்சொல், பெயரடை, வினையடை ஆகியவற்றை வேறுபடுத்தி ஒலித்துப் பழகுதல். | வேற்றுமை உருபுகள் உள்ள தொடர்களைப் படித்துப் பழகுதல். | சிறு சிறு தொடர்களில் வேற்றுமை உருபுகளைப் பயன்படுத்தி எழுதுதல். |
| | பயன்பாட்டிலுள்ள பெயர்ச்சொல், வினைச்சொல், பெயரடை, வினையடை | வேற்றுமை உருபுகளைப் பயன்படுத்திச் சிறு சிறு தொடர்களாகப் பேசுதல். | | |
| | வேற்றுமை உருபுகள் கொண்ட சிறு சிறு தொடர்களைக் கேட்டறிதல். | | | |

## மேலாய்வாளர் குழு

**முனைவர் ச. மாடசாமி,**
பேராசிரியர் (ஓய்வு), சென்னை.

**திருமதி. ஆ. சே. பத்மாவதி,**
எழுத்தாளர், சென்னை.

**திரு. ச. தமிழ்ச்செல்வன்,**
எழுத்தாளர், சிவகாசி.

## பாடத்திட்ட வல்லுநர் குழு

**முனைவர் ந. நடராச பிள்ளை,**
மேனாள் இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்,
மைசூரு.

**முனைவர் ப. டேவிட் பிரபாகர்,**
தமிழ்த் துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை.

**முனைவர் வ. தனலட்சுமி,**
இணைப் பேராசிரியர், சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி & இலக்கியப் புலம்,
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி - 605014.

**திருமதி பா. மலர்விழி,**
விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவூர் - 602025, திருவள்ளூர் மாவட்டம்.

## பாட ஒருங்கிணைப்பாளர் குழு

**முனைவர் க. ஜானகி,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திரு. ச. சுசீந்திரன்,**
உதவி நிரலர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## மெய்ப்புத் திருத்துநர்

**திரு. ம. அமல்ராஜ்,**
பட்டதாரி ஆசிரியர், பல்லவபுரம் நகராட்சி மேல்நிலைப் பள்ளி,
ஜமீன் இராயப்பேட்டை, செங்கல்பட்டு மாவட்டம்.

## புத்தக வடிவமைப்பாளர்

**திரு. சி. ரமேஷ்,**
ஸ்பின்டா மீடியா ((மேகு ஸ்டுடியோ), கடை எண்: 92 தரை தளம், ரஹத்
பிளாசா, 172, ஆற்காடு சாலை, வடபழனி, சென்னை-26.

## பாடநூலாசிரியர் குழு

**முனைவர் கோ. நாராயணமூர்த்தி,**
பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),
பாரதி மேல்நிலைப்பள்ளி, ரெட்டிப்பட்டி, நாமக்கல் மாவட்டம்.

**திருமதி பி. மாங்கனி,**
பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),
அரசு உயர் நிலைப் பள்ளி, நாகமங்கலம், அரியலூர் ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.

**முனைவர் சு. பலராமன்,**
முதுகலைத் தமிழாசிரியர்,
ஜெயின் பப்ளிக் பள்ளி, திருமுடிவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்.

**திரு. கோ. சிவகுமார்,**
முதுகலைத் தமிழாசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, பள்ளப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

**திரு. நா. சக்திவேல்,**
பட்டதாரி ஆசிரியர்,
மாநகராட்சி நடுநிலைப் பள்ளி, பாப்பநாயக்கன் பாளையம்,
கோவை மாவட்டம்.

**முனைவர் தெய்வ. சுமதி.**
தலைமை ஆசிரியர்,
ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளி, ஆதியூர், திருப்பத்தூர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

**திருமதி ச. பஞ்சவர்ணம்.**
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, தாம்பரம், சானிடோரியம்.
செங்கல்பட்டு மாவட்டம்.

**திருமதி ப. விசாலாட்சி,**
இடைநிலை ஆசிரியர்,
நகராட்சி நடுநிலைப் பள்ளி, காதர்பேட்டை, திருப்பூர் மாவட்டம்.

**திரு. கு.வ. மகேந்திரன்.**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
பெரிய குக்குண்டி, இராணிப்பேட்டை மாவட்டம்.

**திருமதி பா. ப்ரீத்தி,**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சீர்ப்பனந்தல்.
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

## தட்டச்சுக் குழு

**திருமதி சோ. ஜோதி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திருமதி கோ. கல்விக்கரசி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திருமதி சசிகலா ஜீவா,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திருமதி இரா. சிவசங்கரி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திருமதி ம. சரண்யா,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

# குறிப்பு

# குறிப்பு

# குறிப்பு

# குறிப்பு

# குறிப்பு

## குறிப்பு

## குறிப்பு

# குறிப்பு

தமிழ் இணையக் கல்விக்கழகம்

சென்னை – 600025.

www.tamilvu.org

978-81-977380-5-0